GOKULAM

செப்டெம்பர் 2007 ★ விலை ரூ.8/- ★ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



ஏலியன்கள் நிஜமா?

கோகுலம் சிறுவர் சங்கம்
உறுப்பினர்கள்



தொடர்ச்சி 3-ம் அட்டையில்...

அறிவியல் சிறப்பிதழ்!

உள்ளே...

உங்களைச் சந்திக்க இவர்கள் காத்திருக்கிறார்கள்!



ஏலியன்ஸ் நிஜமா? 4

அறிவியல் தியாகி! 12





30 யானையாரே... யானையாரே!

அறிவுக் களஞ்சியம் ஆர்தர் மே! 54





72 ரோ..ரோ..ரோ.. ரோபோ!

மேலும் பலர்...

கோகுலம்

கல்கி

செப்டெம்பர் 2007 மலர் : 25 இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



அன்புள்ள உங்களுக்கு...

ஆடையின்றி கானகத்தில் விலங்குகளுடன் விலங்குகளாகச் சுற்றித் திரிந்த ஓர் இனம், 'மனிதன்' என்ற அந்தஸ்தைப் பெற்றது அதன் அறிவுத்திறத்தினால்தான்! 'அறி வியல்' என்ற ஐந்தெழுத்தில்தான் இன்று உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது.

ஐந்தெழுத்து மந்திரம்!

நூறு மனிதர்கள் சேர்ந்து பல மணி நேரம் செய்கிற ஒரு வேலையை, ஓர் இயந்திரம் சில நிமிடங்களில் செய்து விடுகிறது. அதற்காக, அந்த இயந்திரம் மனிதனைவிட உயர்ந்ததாகிவிடாது. காரணம், அந்த இயந்திரத்தை உருவாக்கியதே மனிதனின் மூளைதான்! ஆகவே, மனிதனைவிட ஆற்றல்மிக்கது எதுவுமில்லை.

நாளை நீங்களும் உலகம் போற்றும் விஞ்ஞானியாக உயரக் கூடும். அப்போது உங்கள் சிந்தனைகள் ஆக்கப்பூர்வமான வழியிலேயே செல்ல வேண்டும். நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு விஷயமும் மனித சமுதாயத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும். பயமுறுத்துவதாக இருக்கக் கூடாது.

அன்புடன்
கோகு



இந்தியாவின் முதல் ஜெனரல் போஸ்ட் ஆபீஸ் தொடங்கிய ஆண்டு 1786.



பலவிதமான கேள்விகள் மூலம் எங்களை அறிவு 'கொக்கு'களாய் மாற்றிவந்த 'அன்புடன் ஜக்கு' பகுதியை நிறுத்தியதில் சற்றே வருத்தம்.

- வே.ந.கதிர்வேல், வேலூர்

ஆகஸ்ட் மாத நகைச்சுவை சிறப்பிதழின் ஒவ்வொரு பகுதியையும் படித்ததோடு, எனது பள்ளி மாணவ, மாணவியர்களிடமும் காண்பித்து மனம் மகிழ்ந்தேன்!

- எம்.சிவரஞ்சனி,
திருவாரூர் மாவட்டம்

கோகுலம் (ஆகஸ்ட் 2007) இதழை வாங்கியவுடன் அட்டைப் படத்தின் அழகில் மயங்கியதால் இதழின் மற்ற பக்கங்களைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவே வெகு நேரம் ஆகிவிட்டது!

- வி.வேல்முருகன், முத்தம்பட்டிகேட்

அடடே! சிரிப்பிதழில் டாக்டர் பக்கம் வந்த 'ஹாஸ்ய யோக்' மிகச் சிறப்பாக இருந்தது. அறிய வேண்டிய அற்புதத் தகவல்கள்!

- ஆர்.கே.கார்த்திக்,
மணவிளை



ஆபூவும் தேனீக்களும் கதை ஒவ்வொரு உயிருக்கும் நாம் மதிப்பளித்தால், அது நம்மை சரியான சமயத்தில் காக்கும் என உணர்த்தியது. பாராட்டுக்கள்!

- எஸ்.கே.வாலி,
த.முருங்கப்பட்டி



அழகில் மயங்கினேன்!

76 வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே **ஹேலி வால் நட்சத்திரம்** தோன்றுகிறது.

ஏலியன் யார்?

கோள்கள் மொத்தம் ஒன்பதா, எட்டான்னு ஒரு குழப்பம் கிளம்பி, இப்பதான் 'எட்டு'ன்னு உலகம் முழுவதும் சொல்லிக்கறாங்க. இதுல எந்தக் கோளிலிருந்து 'ஏலியன்' கிளம்பி வர்றாரு?

பழங்காலந்தொட்டே மனிதர்களிடம் வானத்தில் கடவுள் இருக்கார், இன்னும் பல உலகங்கள் இருக்குன்னு பல பலவிதமான நம்பிக்கைகள்! எகிப்து, அரேபியா, சீனா, இந்தியா... போன்ற நாடுகளில் அதிக நம்பிக்கை இருந்தது. வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் இருக்கு என்னும் நம்பிக்கையை ஆங்கிலத்தில் 'எக்ஸ்ட்ரா டெரஸ்டிரியல் லைப்' என அழைத்தனர்.

வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் வாழ்வதைப் பற்றி, கிரேக்க எழுத்தாளர்கள் கி.மு. ஏழு, ஆறாம் நூற்றாண்டுகளிலேயே சிந்திக்கத் தொடங்கி விட்டனர். குறிப்பாக, 'தாலே' மற்றும் அவரது மாணவர் 'அனக்ஸிமாண்டர்'. இம் முயற்சியில் ஈடுபட்டனர். பழங்கால யூத எழுத்தாளர் 'தால்மட்' என்பவர் மொத்தம் பதினெட்டாயிரம் உலகங்கள் இருப்பதாகச் சொன்னார். 'லூசியன்' தன்னுடைய நாவல்களில் பிற கோள்களில் மனிதர்களைப் போன்ற பிற உயிரினங்கள் வாழ்வதாகச் சொல்லியுள்ளார்.



ஏலியன்ஸ் நிஜமா?

சூரியனைவிட பிரகாசமான நட்சத்திரம் **ஈகிள்.**



அறிவியல் பூர்வமாக ஏலியன்ஸ் பற்றி ஏதாவது க்ளூ கிடைக்குதா பார்ப்போம். பூமியைத் தவிர வேறு எங்காவது உயிரினங்கள் உண்டா? 'உண்டு' என்பதற்கான முதற்படியைச் 'செவ்வாய்க் கிரகம்' கொடுத்துள்ளது. செவ்வாயிலிருந்து கிடைத்த விண் கல்லில் பூமியில் இருப்பது போன்ற பாக்டீரியா படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறிய உயிரினம் உண்டென்றால்... பெரிய உயிரினம் உண்டுதானே?

'யூரோப்பா' என்பது வியாழன் என்னும் கோளினுடைய நிலா. இங்கே தண்ணீர் படிமங்கள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். தண்ணீர் இருந்தால் உயிரினம் இருக்கலாமே!





அமெரிக்காவின் நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 2005ஆம் ஆண்டு கூடி விவாதித்த போது, செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான வலுவான காரணங்களை எடுத்து வைத்துள்ளனர். சில விஞ்ஞானிகள் முன்பு செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் வாழ்ந்திருக்கலாம் என்றனர். சில விஞ்ஞானிகள் இப்பொழுதும் உயிரினங்கள் வாழ்கின்றன என்றனர்.

'ஏலியன்' என்னும் வேற்றுக் கிரக உயிரினம் பற்றிய சிந்தனை, இருபதாம் நூற்றாண்டில் அதிக



மாகவே வளர்ந்துள்ளது. எப்படி விஞ்ஞானிகள், அறிஞர்கள் மத்தியில் ஆதரவு, எதிர்ப்புக் கருத்துகள் நிலவுகின்றதோ, அதே போல பொதுமக்கள் மத்தியிலும் நம்பிக்கை அவ நம்பிக்கை உள்ளது.

நிலவுக்குள் மனிதன் இறங்கும் வரை, நிலவும் ஒரு கதைதான். பூமி உருண்டை என்பதை ஒப்புக் கொள்ளும் வரை, தட்டை நிஜமாக இருந்தது; உருண்டை கதையாக இருந்தது! ஆய்வுக்குள் உட்படுத்தும்போது இந்த நூற்றாண்டுக் கதைகளுக்கு அடுத்த நூற்றாண்டில் விடை கிடைக்கும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் 'ஏலியனைப் பார்த்த விவரத்தை அமெரிக்க இராணுவ வீரர் வாக்கு மூலமாகப் பதிவு செய்து வைத்திருக்கிறார். அது இன்றளவும் உலக அளவில் மிகப் பெரிய ஆதாரமாகக் கருதப்படுகிறது. அது என்ன சம்பவம்? பார்க்கலாமா?

வாஷிங்டன் மாகாணத்தில் இருக்கிற மலையில், அதுவும் சுமார் 10,000 அடி உயரமான இடத்தில் வேகமான ஒளியை வீசியபடி விண்கலம் ஒன்று வந்து கொண்டே இருக்கிறது. இதை பைலட் 'கென்னத் ஆர்னால்ட்' பார்த்துக் கொண்டே இருக்கிறார். கண்ணைப் பறிக்கும் ஒளி! அதன் வேகம் 1,600 மைல் இருக்கும். ஒரு ஜெட் விமானத்தை விட மூன்று மடங்கு வேகமாகப் பறந்து வருதாம். அடுத்த நாள் பத்திரிகைச் செய்தியில் 'விமானப் படையினர் பறக்கும் தட்டுகளைக் கைப்பற்றினர்' என வந்தது. அதற்கு அடுத்த நாள் செய்தியில் 'பலூன் பறந்து வந்தது' என மாறியுள்ளது.

'ஏலியன்' என்னும் வேற்றுக் கிரகவாசிகள், மனிதர்களை விட அபூர்வ சக்தி படைத்தவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் இருக்கக் கூடும்.

அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய 'மேஜர் ஜெஸ்ஸி மார்சல்' ''பறக்கும் தட்டின் இரும்பு ரொம்ப மென்மையாக இருந்தது; அதே நேரத்தில் உடைக்க முடியாததாக இருந்தது'' என்றார். அப்போது, அங்கே மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றிய 'லெப்டினன்ட் வால்டர் ஹவுட்' எழுதிய குறிப்பு அவரது மறைவுக்குப் பின்னர் வெளியானது. அதில் பறக்கும் தட்டை மட்டும் கைப்பற்றவில்லை; அதில் 'ஏலியன்' உடல்கள் இருந்ததையும் குறிப்பிட்டு இருந்தார். ஆனால், 'ஏலியன் மனிதர்கள் அல்ல; மனிதர்களைப் போன்ற வடிவங்கள்' என்றார். நான்கு அடி உயரம்; பெரிய தலை கொண்டவையாக 'ஏலியன்' தோற்றத்தைக் குறிப்பிடுகிறார்.

'ரோஸ் வெல்' என்பவர் பறக்கும் தட்டைப் பற்றிச் சொல்லும்போது, '12 - 15 அடி நீளம், 6 அடி அகலம் கொண்டதாக இருந்தது' என்கிறார்.

'ஏலியன்' என்னும்


வேற்றுக்கிரகவாசிகள், மனிதர்களை விட அபூர்வ சக்தி படைத்தவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் இருக்கக் கூடும்.

'ஏலியன் உண்மைதான்' என்பதற்கு ஆதாரமாக பிற கோள்களில் உயிரினங்கள் உள்ளன என்பதை எடுத்துக் கொள்ளலாம். பூமிக்கு அருகில் உள்ள கோள் வெள்ளி! இதில் நுண்ணுயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறு உண்டு என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். சனிக் கிரகத்தின் மிகப் பெரிய துணைக் கோள் 'டைட்டான்'! இதில் ஏரி இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர். உயிரினங்கள் வாழத் தேவையான ஆக்ஸிஜன், தகவமைப்புக்குத் தேவையான ஈர்ப்பு விசை போன்றவை இல்லாமல் உயிரினங்கள் எப்படி வாழும்? எனக் கேள்வி எழுப்பி 'ஏலியன்'களை மறுப்பவர்களுக்கு...

மனிதன் வாழ்வது போலத்தான் வேற்றுக்கிரக உயிரினங்கள் வாழ வேண்டுமா? அதற்கு வேறு தகவமைப்பு இருக்கக் கூடாதா? இயற்கையின் முடிச்சுகளை யாரால் அவிழ்க்க முடியும்? நாம் நம்முடைய விஞ்ஞானத்தின் மூலம் விண்வெளியின் எல்லைகளில் எவ்வளவைத் தொட்டிருக்கிறோம்?

விண்வெளி நாம் அறிந்து கொள்ள முடியாத அண்டவெளி. விண்வெளி எல்லாப் பக்கங்களிலும் விரிவடைந்து கொண்டே போகின்ற ஒரு வெற்றிடப் பரப்பு. இந்த விண்வெளியில் பிரபஞ்சங்கள், பால்வழி மண்டலங்கள், விண்மீன்கள், நம்முடைய சூரிய குடும்பம் உள்ளன.

'ஏலியன்' எல்லாவற்றையும் கடந்து நிற்கிறது. கதைகளில், திரைப்படங்களில் 'ஏலியன்' அச்சுறுத்துவதாகக் காண்பிக்கப்பட்டாலும், 'ஏலியன்' குறித்த சந்தேகங்கள் இளம் தலைமுறையினருக்கு இன்னும் விண்வெளியை அளப்பது போலவே விரிந்து கொண்டே போகிறது. அடுத்த நூற்றாண்டில் மனிதர்களும் ஏலியன்களுடன் பறக்கும் தட்டில் வேற்றுக் கிரகம் போனாலும் ஆச்சர்யமில்லை! ●





கைரேகைப் புலனாய்வு முறையை முதன் முதலில் உருவாக்கியவர்

"எலியாரே! வணக்கம்."

"வாங்க நரியண்ணே! என்ன செய்தி?"

"உன்னால எனக்கு ஒரு வேலை ஆகணும்."

"என்னன்னு சொல்லுங்க."

"போன வாரம் போலீஸ் வேலைக்கு இன்டர்வ்யூ வச்சாங்க. நானும் போயிருந்தேன். பல கட்டத் தேர்வுகளுக்குப் பிறகு கடைசி கட்டத் தேர்வுல நானும் கரடியும் கலந்துகிட்டோம். கரடிக்குத்தான் அந்த வேலையைக் கொடுக்கப்போறதா நம்பத்

சூப்பர் போலீஸ்!

தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைச்சிருக்கு. எனக்குக் கிடைக்கும்னு ஆசையா இருந்தேன். சம்பளம், பேட்டா எல்லாம் கை நிறைய வாங்கலாம்னு நினைச்சேன். மந்திரி வெள்ளைப் புலியாரிடம் கூட சிபாரிசு செய்யச் சொல்லியிருந்தேன். ஆனால் மன்னர் யார் பேச்சையும் கேட்கலையாம்."

"என்ன அண்ணே! போயும் போயும் அந்த கரடியா போலீஸ்? சரி இதுல நான் என்ன செய்யணும்?"

"சிங்க மகாராஜா நாளை மாலை ஐந்து மணிக்கு கரடியார் வீட்டுக்குச் சாப்பிட வருகிறாராம். நான் நாளைக்கு உன்கிட்டே மகாராஜாவோட மோதிரத்தைக் கொண்டு வந்து கொடுப்பேன். நாளை மாலை ஐந்து மணிக்கு முன்னாடியே கரடியார் வீட்டுக்கு யாருக்கும் தெரியாமல் மோதிரத்தோடு வந்து, ஓட்டு மேலே ஏறி மோட்டு வளையத்தில் ஒளிஞ்சுக்க. மகாராஜா சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது மேலேயிருந்து மோதிரத்தை குறி தவறாமல் அவர் தட்டிலே போடு. கரெக்டா அந்த சமயத்துக்கு நான் அங்கே வந்து, 'கரடிதான் மோதிரத்தைத் திருடி ஒளிச்சு வச்சிருந்தது. கடவுளா பார்த்து உங்க மோதிரத்தை உங்களுக்கே கிடைக்கும்படி செய்துட்டார்'ன்னு டிராமா போடுவேன். இதை நீ செய்தா நான் போலீஸானதும் உன்னைத் தனியா கவனிக்கறேன்" என்றது கரடி.

எலி சம்மதித்தது.

மறுநாள் சிங்க மகாராஜா ஆற்றில் குளிக்கும்போது கழற்றி வைத்திருந்த மோதிரத்தை, நரி திருடி எலியிடம் கொடுத்து விட்டது. எலியும் வாங்கி பத்திரமாக வைத்துக்கொண்டது.

மாலை நாலரை மணிக்கே கரடியார் வீட்டுக்குச் சென்று சமர்த்தாக கதவில் ஏறி ஓடுகள் வேயப்பட்டிருந்த பகுதியில் சென்று அமர்ந்து கொண்டது.

அப்போது வெங்காய வடை வாசனை எலியின் மூக்கைத் துளைத்தது. வாயில் நீரைச் சுரக்க வைத்தது. 'வெங்காய வடை எனக்கு உயிராச்சே, என்னால இங்கே உட்கார முடியலே, ஒரு வடையாவது திங்க வேண்டும்' என்று

எட்வர்டு ஹென்றி என்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.



மனதுக்குள் கூறிக் கொண்டது. மெதுவாகக் கீழே இறங்கி, வாசனை வழிகாட்ட வெங்காய வடை இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிட்டது. ஒரு பாத்திரம் நிறைய வடைகள் இருந்தன. மகாராஜா வருவதற்குள் தின்று முடித்துவிட வேண்டும் என்று எண்ணிய எலி, மோதிரத்தை பத்திரமாகத் தன் பாக்கெட்டில் வைத்துக்கொண்டது. ஒரு வடையை எடுத்துக் கொண்டு வீட்டின் பின் பக்கம் சென்றது. ஆசையோடு தின்றது. வடை மிகவும் சுவையாக இருந்ததால் மீண்டும் மீண்டும் சாப்பிட்டது.





''இவன் ஒரு திருட்டுப் பயல். காலையில் நீங்கள் குளிக்கும்போது உங்கள் மோதிரத்தையே திருடி விட்டான்''

நரியாருக்குக் கோபம் கோபமாக வந்தது. கரடியின் வீட்டின் வெளிப் பக்கத்திலே நின்று நின்று காலே வலி கண்டுவிட்டது. மோதிரம் மேலிருந்து விழுந்ததற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை. சந்தோஷமாக சிங்கம் சாப்பிடுவதை மறைந்திருந்தபடி பார்த்த நரிக்கு ஒரே எரிச்சல்!

சாப்பிட்டு முடித்து வெளியே வந்த மகாராஜா அங்கே நரி நின்றிருப்பதைப் பார்த்து ''என்ன நரித் தம்பி இங்கே நின்னுட்டிருக்கே?'' என்று கேட்டது.

''அ... அது... வ... வந்து'' என்று திணறிய நரிக்கு சட்டென ஒரு யோசனை! ''அரசே, இந்த கரடிக்கு நீங்கள் போலீஸ் வேலையைத் தரப் போகிறீர்கள். எனக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. இவனுக்குத் தராதீர்கள். காரணம், இவன் ஒரு திருட்டுப் பயல். காலையில் நீங்கள் குளிக்கும்போது உங்கள் மோதிரத்தையே திருடி விட்டான். அது இந்த வீட்டில்தான்

சுழல் கோப்பை!



கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் நான்கு மாதங்கள்தான் உள்ளன. விரைந்து அனுப்புங்கள்! கோப்பையை வெல்லுங்கள்!!



இருக்க வேண்டும். நான் தேடித் தருகிறேன். வாருங்கள்'' என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றது.

நாற்காலியைப் போட்டு ஏறி மோட்டு வளையத்தில் எலி இருக்கிறதா என்று தேடியது. எலியும் இல்லை! மோதிரமும் இல்லை! ஏமாற்றத்துடன் கீழே இறங்கியது.

''என்ன? மோதிரம் எங்கே?'' என்று கேட்டது சிங்கராஜா.

''அரசே! அதை நான் காட்டுகிறேன் வாருங்கள்'' என்ற கரடி சமையலறைக்குள் அழைத்துச் சென்றது.

இவ்வளவு கலாட்டா நடப்பது தெரியாமல் அங்கே எலி வடைகளைச் சுவைத்துக் கொண்டிருந்தது.

''எலிப் பயலே சாப்பிட்டது போதும்! இப்படிப் பார்'' என்றது கரடி.

திடுக்கிட்டுத் திரும்பிய எலி பயத்தில் நடுங்கியது. அதன் பையில் இருந்த மோதிரம் நழுவி விழுந்தது. அதைப் பார்த்த சிங்கம் எலியை கோபத்துடன் முறைத்தது.

அவ்வளவுதான்! நடுங்கிப் போன எலி ''அரசே, என்னை மன்னியுங்கள்! எல்லாம் இந்த நரியால்தான்'' என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் சொல்லிவிட்டது.

''அரசே! இவர்கள் போட்ட சதி திட்டத்தைக் கிளியார் கேட்டு விட்டு என்னிடம் வந்து சொன்னார். இவர்களை கையும் களவுமாகப் பிடிக்க நான்தான் இப்படி வடைகளைச் செய்து வைத்தேன். எலிப் பயல் என் பொறியில் மாட்டிக் கொண்டது'' என்றது கரடி.

''சபாஷ்! போலீஸ் வேலைக்கு நீ தகுதியானவன் என்பதை நிரூபித்து விட்டாய். குற்றவாளிகளைப் பிடிக்க வேகம் மட்டும் போதாது. புத்திசாலித்தனமான அணுகுமுறையும் தேவை. அப்போதுதான் சூப்பர் போலீஸாக முடியும். உன் வேலை இன்றே ஆரம்பிக்கிறது. நீ முதன் முதலில் கைது செய்யும் நபராக நரி இருக்கட்டும். எலிப் பயலே உன்னையும் சிறையில் அடைக்க வேண்டும். பாவமென விடுகிறேன். இனி இந்த மாதிரி தப்புக்குத் துணை போகாதே'' என்றார் சிங்கராஜா.

அப்புறமென்ன?

கரடி, நரியைக் கைது செய்து அழைத்துச் சென்றது. ●



திமிங்கிலத்தின் குட்டிகள் தாயிடம் பாலைக் குடிப்பதில்லை. மாறாக திமிங்கிலம் பீய்ச்சி அடிக்கும்போது வெளிப்படும் பாலை அவை குடிக்கின்றன. சாதாரணமாக திமிங்கில குட்டிக்கு ஒரு நாளைக்கு 220 பவுண்ட் அளவு பால் தேவைப்படுகிறது. இவ்வளவு அதிகமான பாலை அது தாயிடம் உறிஞ்சிக் குடிப்பதற்குள் குட்டிக்கு வாய் அலுத்துவிடும். இதனால் தான் திமிங்கிலம் தன் மார்புக் காம்புகளில் இருந்து பாலை வேகமாகக் பீய்ச்சி அடிக்கும்போது அதை குட்டிகள் வசதியாக குடிக்கின்றன.

- சி.புவனேஸ்வரி, இராமநாதபுரம்





மனித ரத்தம் 78% திரவத்தாலும் 22% திடப்பொருளாலும் ஆனது.

அறிவியல்

✱ கணவன், மனைவி, மகள், மருமகன் என அத்தனை பேரும் நோபல் பரிசு பெற முடியுமா? மேரி க்யூரியின் குடும்பத்தால் அந்த சாதனையைச் செய்ய முடிந்தது. போலந்தில் உள்ள வார்ஸா நகரில் 7.11.1867-ல் பிறந்தவர் மேரி. பெற்றோர் இட்ட பெயர் 'மர்யா ஸ்க்லோடோவஸ்கா.'

✱ காசநோய் மேரியின் அம்மாவை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. மேரிக்கு ஒன்பது வயதானபோது அவரது தாய் இறந்தார். மனிதர்களின் நோயைத் தீர்க்கும் விதத்தில் தானும் ஏதாவது செய்தாக வேண்டுமென மேரியின் மனத்தில் உறுதி ஏற்பட்டது.



✱ மேரி க்யூரி

✱ பிரபல பள்ளி ஒன்றில் மேரியைச் சேர்த்தார் அவரது தந்தை. தனது பதினைந்தாவது வயதில் பள்ளி இறுதிப் படிப்பை முடித்ததுடன், அதில் தங்கப் பதக்கமும் பெற்றார் மேரி. பாரிஸ் நகருக்குச் சென்று ஆறு வருடங்கள் பட்டப்படிப்பை மேற்கொண்டார். அந்தக் கல்லூரியில் படித்த சுமார் இரண்டாயிரம் மாணவர்களில் பெண்கள் இருபத்தி மூன்று பேர்தான்!

✱ அந்த நாட்களில்தான் பியரி க்யூரியைச் சந்தித்தார் மேரி. ஏற்கெனவே பீஸோ எலக்ட்ரிசிட்டியைக் கண்டுபிடித்த பெருமை பியரிக்கு இருந்தது. 1895 ஜூலை 26 அன்று அவர்கள் எளிய முறையில் திருமணம் செய்து கொண்டார்கள்.

✱ அடுத்த பதினான்கு வருடங்களும் அவர்கள் கதிரியக்கப் பொருட்களைப் பற்றியே ஆராய்ச்சி செய்தார்கள். யுரேனியத்தைச் சுற்றியே அவர்களது பல ஆராய்ச்சிகளும் நடைபெற்றன.

✱ 1898ல் வேதியியலில் டாக்டரேட் பெற வேண்டுமென்று முடிவெடுத்தார் மேரி. யுரேனியம் கதிர்களின் சக்தி குறித்து ஆராயவும் தீர்மானித்தார்.

✱ மேரி, தோரியம் என்ற கதிரியக்க இயல்பு கொண்ட பொருளைக் கண்டுபிடித்தார். (கதிரியக்கம் என்ற வார்த்தையை உருவாக்கியதே மேரிதான்!)

✱ 1903ல் தனது கண்டுபிடிப்பை உலகுக்கு நிரூபித்தனர். இதேபோன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த பெக்விரில் என்பவருக்கும், மேரி-பியரிக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஸ்டேப்ளரை 1868 ஆம் ஆண்டு **ஹென்றி சௌல்டு** என்பவர் கண்டுபிடித்தார்.




தியாகி!

✸ அணுவின் மர்மங்களை பியரியும் மேரியும் அறிய முயற்சித்தார்கள். இதன் விளைவாக 'குவாண்டம் மெக்கானிக்ஸ்' என்ற புதிய கோட்பாடு உருவானது.

✸ உலகமே ரேடியத்தின் அற்புத

✸ பியரி க்யூரி



சக்தியைப் பாராட்டியது. கதிரியக்க சாம்பிள்களைத் தொடர்ந்து கையாண்டதால் இருவரது கை விரல் நுனிகளும் கருத்து இறுகிப் போயின.

✸ ஒரு மழைக்கால மதியத்தில் தனியே வெளியே நடந்து கொண்டிருந்த பியரியின் பார்வை திடீரென மோசமடைய, எதிரில் வந்த குதிரை வண்டியின் முன் விழுந்தார். குதிரையும், வண்டியும் அவர் மேல் ஏற, உடனடியாக இறந்து விட்டார். மேரியால் இந்தத் துக்கத்தைத் தாங்க முடியவில்லை.

✸ பியரியின் இடத்தில் மேரியைப் பேராசிரியராகப் பணிபுரிய அனுமதித்தது பல்கலைக் கழகம். பிரான்ஸ் நாட்டில் இந்த உயர் பதவியை வகித்த முதல் பெண்மணி மேரிதான்!

✸ ரேடியம் மற்றும் பொலானியம் ஆகியவற்றைக் கண்டுபிடித்ததற்காக மேரிக்கு மீண்டும் ஒருமுறை நோபல் பரிசு வழங்கப்பட்டது.

✸ மேரியின் மகள் ஐரனேவும் அவர் கணவர் ஜீவியெட்டும் இணைந்து செயற்கைக் கதிரியக்கத்தைக் கண்டுபிடித்தார்கள். இதற்காக 1935ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஓய்வில்லாமல் மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேரி க்யூரி புற்று நோயால் இறந்தார்.

✸ நாட்டின் சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்களைத் தியாகிகள் என்போம். அறிவியலில் தங்களையே முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, உலகுக்குப் பல்வேறு கண்டுபிடிப்புகளை அளித்த மேரி குடும்பத்தை அறிவியல் தியாகிகள் என்று சொன்னால் அது மிகையில்லை! ●



இரா. இராகவி,
ஏழாம் வகுப்பு,
டி.ஏ.வி. பள்ளி,
சென்னை.

நான்கு கோடி

மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்.
உண்ணீர்உண் என்(று) உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி பெறும்.
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்
கோடாமை கோடி பெறும்.

ஔவையார்.



பரத் ரவிக்குமார்,
ஐந்தாம் வகுப்பு,
எஸ்.பி.ஓ.ஏ.
மேல்நிலைப் பள்ளி,
கோயம்புத்தூர்.

ஔவையார் அருளிய ஆத்திச்சூடி

அறம் செய விரும்பு. ஆறுவது சினம்.
இயல்வது கரவேல். ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல். ஊக்கமது கைவிடேல்.
எண் எழுத்து இகழேல். ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டு உண்.
ஒப்புரவு ஒழுகு. ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.



எஸ். மானஸா,
இரண்டாம் வகுப்பு,
மலர் மெட்ரிகுலேஷன் பள்ளி,
நாமக்கல்.

உணவே மருந்து

கனிகள் உணவாகவும் பயன்படும்.
கனிகள் மருந்தாகவும் பயன்படும்.
காய்கள் எல்லாம் மருந்து.
கீரைகள் எல்லாம் மருந்து.
தமிழனுக்கு உணவே மருந்து.
தமிழனுக்கு மருந்தே உணவு.
அளவோடு சாப்பிடு!



சூப்பர்

கையெழுத்து!



பிரீத்தி பிரபு,
ஒன்பதாம் வகுப்பு,
செட்டிநாடு வித்யாஷ்ரம்,
சென்னை.

பேரறிஞர் அண்ணா

உதயசூரியனாய்த் தோன்றிய அண்ணாதுரை பொருளாதாரத் துறையில் எம்.ஏ. பட்டத்தைப் பெற்றார். ஈ.வே.ரா பெரியாருடன் இணைந்து சீர்திருத்த நோக்கத்துக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். தீண்டாமைக் கொடுமை, சாதி உயர்வு தாழ்வு, இளமை மணக்கொடுமை, பெண்ணடிமை ஆகியவற்றினை ஒழிக்க அண்ணா பாடுபட்டார். 'சொல் புதிது சுவை புதிது' என்று அவரது பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் இயம்பலாம். ஆங்கிலத்திலும் அவர் வல்லவராக விளங்கினார்.



பி.ஜெ. அனீஷ்,
எட்டாம் வகுப்பு,
தக்கலை - ஹிந்து வித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
இரணியல்.

எங்கள் தமிழ் நாடு - என்றும்
இன்பம் வளர் வீடு.
பொங்கும் புகழ் ஏடு - புவியில்
புகலுமோ இதற்கு ஈடு
பண்பும் பயனும் கூடும் - மக்கள்
புலமை நயம் தேடும்
என்றும் உயர் வோங்கும் - எதுவும்
எளிமை நலம் நாடும்



சி. தனுஷ் ஆதித்தியா,
இரண்டாம் வகுப்பு,
பாரதிய வித்யா பவன்
மேல்நிலைப் பள்ளி,
கோயம்புத்தூர்.

தென்னாட்டுத் திலகர்
வ.உ.சிதம்பரனார்

கப்பலோட்டிய தமிழன் - செக்கிழுத்த சிதம்பரனார் - தென்னாட்டுத் திலகர் என்று உலகோரால் போற்றப்படுபவரே வ.உ. சிதம்பரனார்.

வ.உ.சிதம்பரனார்

ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் பிறந்தார். அவர் தந்தை உலகநாத பிள்ளை. தாய் பரமாயி. அவர் தந்தையைப் போலவே தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.



வருமான வரியை முதலில் விதித்த நாடு **இங்கிலாந்து.**



விடையைச் சொல்; பரிசை வெல்--3


பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டு பிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி 10.9.2007

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32



கேள்விகள் :

1. 'யூரோப்பா' என்பது என்ன? ______________________
2. மேரி க்யூரிக்கு பெற்றோர் வைத்த பெயர் என்ன? ______________________
3. புலிக்குட்டி வேடத்திலிருந்த மிருகம் எது? ______________________
4. ரோபோக்களை செய்யும் தொழிற்சாலை துவக்கப்பட்ட ஆண்டு ______________________
5. ஆர்தர் மே சிறுவயதில் என்ன வேலை செய்தார்? ______________________

____

என் பெயர்	: ....
வகுப்பு, பள்ளி	: ....
	: ....
வீட்டு முகவரி	: ....
	....
	....

கதை : ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ் தமிழ் வடிவம் : ராதிகா ரகு

மிஸ்டர் நந்து




என் மூளைக்கு வேலை வந்தாச்சு
ம்... ம்... அம்மா... வேணும்...
டோண்ட் ஓர்ரி பையா!
ஆளைப் பார்த்தா... சுண்டுவோட பையனா தெரியுது.
என் மேலே ஏறிக்க...
தேங்க்ஸ்!
ரை... ரைட்!
யப்பா செம வெயிட்!
வீடு வந்தாச்சு
இதுவா? என் வீடு அந்தப் பக்கம் இருக்கு.
முதலிலே சொல்றது தானே?


ஒருவேளை பிண்டுவோட பையனா?
இதானே உன் வீடு?
நோ! நோ!
மலைக்குப் பக்கத்துலன்னு லேசா ஞாபகம்
கடவுளே!
பிறகு-
ஏய் ஜிட்டு கண்ணா எங்கே போனே?
கோமு நீயா?
இது என் பையன்தான். மாறு வேடப் போட்டியில...
கலந்துக் கறேன்!
ஆ!
மாமா, என்னோட வேடம் சரியா இருக் கான்னு டெஸ்ட் பண்ணினேன்.
அடேய்! உன்னை... உன்னை...



பிறந்த யானைக் குட்டியின் சராசரி எடை 120 கிலோ கிராம்.

காட்டுக்குள்

* புஜியோ

டியர் சில்ட்ரன்! இரண்டு மாசமா மலைகளைப் பார்த்தோம். இப்ப இறங்கி காட்டுக்குள்ளே போகலாமா? 'காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லை நிலம்'ன்னு நம்ம தமிழ் இலக்கண நூல் வரையறுத்துச் சொல்லுது.

வாங்க! நாம அமேசான் காட்டுக் குள்ளே போகலாம் பயப்படாதீங்க! தைரியமா வாங்க. அங்கிள் கூட வர்றேன். அமேசான் காடு எவ்வளவு பசுமையாக இருக்கு. நாம வரைபடத்துல (மேப்) பார்த்தா, அமேசான் காட்டுக்குள்ளே ஒரு பெரிய மலைப்பாம்பு ஓடுற மாதிரி தெரியும். அதுதான் அமேசான் ஆறு. அமேசான் காடுகளை, 'அமேசான் மழைக் காடு' என அழைக் கிறாங்க.



அமேசான் காடுகளின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? ஏழு மில்லியன் சதுர கிலோ மீட்டர்கள்! 'அடேங்கப்பா!'ன்னு நீங்க ஆச்சரியப்படறது கேட்குது. மொத்தம் ஒன்பது நாடுகளில் இந்தக் காடு பரவிக் கிடக்கு. பிரேசில் நாட்டில் மொத்தம் 60 சதவிகிதம் காடுகள் இருக்கு. பிறகு பொலிவியா, கயானா, சுரினாம், பிரெஞ்ச் கயானா, வெனிசூலா, கொலம்பியா, பெரு, ஈக்வேடார் போன்ற நாடுகளில் பசுமையைப் படர விட்டிருக்கு.

ஆயிரக்கணக்கான உயிரினங்களின் வீடா அமேசான் காடு விளங்குது. 2.5 மில்லியன் பூச்சி வகைகள் அமேசான் காடுகளில் இருக்காம். நாற்பதாயிரத் துக்கும் மேற்பட்ட தாவர வகைகள்



அமேசான் ஆறு ஒரு நொடிக்கு **63,50,000** கன அடிகள் பாய்கிறது.



அறிவுப் பூங்கா

முனைவர் ஆசுரா

கயாபோ!

இருக்காம். அப்போ, எவ்வளவு வகையான பறவைகள் இருக்கும்? கெஸ்... பண்ணுங்க! மொத்தம் 1,294 வகையான பறவைகள்! 75,000க்கும் மேற்பட்ட பல வகையான மர வகைகள். என்ன பட்டியலைப் பார்த்து மலைச்சுப் போயிட்டீங்களா?

அங்கே பாருங்க... எறும்புகளைக் கொத்திச் சாப்பிடுதே அந்தப் பறவையின் பெயர் 'எறும்புத்தின்னிப் பறவை' அதோட அறிவியல் பெயர் 'பாபா ஃபெர் மிகாஸ்'. இங்கே குரங்கு வகையில இரண்டு உண்டு. ஒண்ணு பகல் நேரக் குரங்கு. அது பேரு 'புஜியோ'. இன்னொன்று இரவு நேரக் குரங்கு 'ஓட்டஸ்'. அது மட்டுமில்ல, இங்கே பாய்கிற தண்ணீரையும் அதன் தன்மையையும் வைச்சு 'வெள்ளை ஆறு, கறுப்பு ஆறு, நன்னீர் ஆறு'ன்னு பிரிச்சு வகைப்படுத்தியிருக்காங்க.



* கயாபோ மக்கள்

அங்கே தெரியற புல்வெளியில் யாரும் ஓடி விளையாடலாம்ன்னு நினைக்காதீங்க. அது தண்ணீருக்கு மேல் வளர்ந்து நிற்குற புல்வெளி. இங்கே மிகப் பெரிய நீர்வாழ் லில்லி செடிகள் இருக்கு. பேரு 'விக்டோரியா ரெஜியா'. அது மட்டுமல்ல 'கேப்பிம் மோரி', 'கேனரானா', 'காட்டு நெல்' போன்றவையும் வளருது பைரானா மரங்கள், ரப்பர் மரங்கள் நிறைய இருக்கு. 'சர்வோ', 'அன்டிருபா' போன்ற மரங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணை செய்யுது.

இங்கே 'கயாபோ' என்னும் ஆதி இந்திய மக்கள் வசிக்கறாங்க. இன்னைக்கு ஒரு நாள் அவங்களோட விருந்தாளியா தங்கிட்டு நாளைக்குப் போகலாம். சரியா!



* விக்டோரியா ரெஜியா

கடல்களுள் உப்பு மிகுந்த கடல் அட்லாண்டிக் பெருங்கடல்

ஜப்பான் நாட்டுக் கதை

மந்திர இயந்திரம்!

முன்பெல்லாம் கடல் நீர் நன்றாக இருந்தது. மக்கள் அள்ளி அள்ளிக் குடித்தனர். அப்போது நடந்த நிகழ்ச்சி இது.

ஸொபிடுவும் மொபிடுவும் சகோதரர்கள். ஸொபிடு மூத்தவன். மொபிடு இளையவன். இளையவன் திருமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் செய்ய ஆரம்பித்தான். ஸொபிடு அவ்வப்போது வந்து போவான்.

அந்த ஊரில் ஆண்டின் கடைசி நாளை அனைவரும் கோலாகலமாகக் கொண்டாடுவர். அந்த ஆண்டு மொபிடுவுக்கு நிலைமை சரியில்லை. எதிலும் பற்றாக்குறை. ஒரு முதியவர் ''என்னப்பா மொபிடு 'தொஷிகாமா' கொண்டாட ஏற்பாடு செய்துவிட்டாயா?'' என்றார். (ஆண்டின் கடைசி நாளன்று 'தொஷிகாமா' எனும் தெய்வத்தை வணங்கி கோலாகலமாக மக்கள் விருந்து படைப்பர்)

''என்னவோ போங்கள் தாத்தா. இந்த ஆண்டு போதிய வசதி இல்லை. என்ன செய்யப் போகிறேனோ தெரியவில்லை'' என்றான் மொபிடு.

''கவலைப்படாதே குழந்தாய். இந்தா இந்த 'மாஞ்சு'வைக் கொண்டு, போய் 'கோபிடோ' குள்ளர் மக்களிடம் கொடுத்து அவர்களிடமிருக்கும் அரைக்கும் இயந்திரத்தை வாங்கிக் கொண்டு வா'' என்றார். (மாஞ்சு என்பது ஒரு வகைத் தின்பண்டம்.)





நாடோடிக் கதைகள்

வி. ஜெயலட்சுமி

முதியவரின் சொல்படி நிறைய மாஞ்சுவை எடுத்துக் கொண்டு கோயிலின் பின்புறம் சென்றடைந்தான் மொபிடு.

''நான் மொபிடு. உங்களுக்காக மாஞ்சு கொண்டு வந்துள்ளேன்'' என்றான்.

''ஹை மாஞ்சு... ஹை 'மாஞ்சு...' எல்லாரும் வாங்க 'மாஞ்சு' சாப்பிடலாம். இங்கே கொண்டா... எனக்கு... எனக்கு'' என்று வாங்கிக் கொண்டனர்.

வயிறு நிறைய 'மாஞ்சு' சாப்பிட்டதும் மொபிடு முன்னமேயே கேட்டுக் கொண்டதன் பேரில் அரைக்கும் இயந்திரம் கை மாறியது.



இயந்திரத்தை எடுத்துக் கொண்டு முதியவரிடம் ஓட்டமாக வந்தான்.

''இதோ பார் மொபிடு. இயந்திரத்தின் பிடியை வலது பக்கம் திருப்பி அரைத்தால் நமக்கு வேண்டியது உடனே வந்து சேரும். இடது பக்கம் திருப்பினால் நின்று விடும்.இதுதான் ரகசியம். இந்தா வைத்துக்கொள். விருந்தன்று வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு சென்று விட்டார் அவர்.

அரைக்கும் இயந்திரத்தை எடுத்துக் கொண்டு வீட்டை அடைந்தான் மொபிடு.

''எங்கே போய் விட்டீர்கள்?'' என்று மனைவி கடிந்ததையும் பொருட்படுத்தாமல், ஒரு பாயை விரித்து இயந்திரத்தை அதன் மேல் வைத்துப் பிடியை வலதுபுறம் திருப்பி ''இயந்திரமே எனக்கு இப்போது ஜோகோ, ஹையோகோ, மோசி, ஸாகே (இவையெல்லாம் ஜப்பானிய உணவுகள்) எல்லாம் கொண்டு வா'' என்றான். அனைத்தும் வந்து குவிந்தன. இடதுபுறம் திருப்பியதும் நின்றுவிட்டன. ஆச்சரியத்தில் மொபிடுவின் மனைவி பேச மறந்தாள்.

ஆண்டின் கடைசி நாளும் வந்தது. மொபிடு அண்ணனான ஸொபிடுவை விருந்துக்கு அழைத்தான். முதியவர் இல்லாமலா...? அவரும் இன்னும் பலரும் வந்திருந்தனர். பக்கத்து அறையில் அண்ணனும் தம்பியுமாகத் தேவையானவற்றை இயந்திரத்தின் மூலமாக வரவழைத்துக் கொண்டிருந்தனர். ஸொபிடு வியப்புடன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

''அண்ணா... எல்லாவற்றையும் நீயே உன் கையால் பரிமாறி விட்டு வா'' என்று மொபிடு சொல்ல, ஸொபிடு வெளியேறினான். இதற்குள் இயந்திரப் பிடியை இடதுபக்கம் திருப்பி வேலையை முடித்துவிட்டு இளையவனும் விருந்தில் கலந்து கொள்ளலானான்.

இரவு வந்தது. விருந்து முடிந்து ஸொபிடு, மொபிடு, அவன் மனைவி மூவரும் உறங்கிப் போயினர். ஆசை யாரை விட்டது? ஸொபிடுவின் கண், அரைக்கும் இயந்திரத்தின் மேல் பட்டது. இரவோடு இரவாக இயந்திரத்தைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான்.

ஸொபிடு வீட்டுக்குக் கடல் வழியே செல்ல வேண்டும். கடற்கரையை அடைந்தான். படகு ஒன்று தனியாக நின்றிருந்தது. இயந்திரத்துடன் படகில் ஏறியமர்ந்து வீட்டுக்கு ஓட்டலானான். பாதி வழி சென்றாயிற்று.

விருந்தில் இனிப்புத் தின்பண்டங்களை அதிகம் தின்றதால் ஸொபிடுவுக்கு நாக்கில் சிறிது உப்பு வைத்துக் கொள்ளலாம் போலிருந்தது. நடுக்கடலில் உப்பு எங்கே கிடைக்கும்? சட்டென்று இயந்திரத்தை தம்பி செய்தது போல வலப்புறம் பிடியைத் திருப்பினான். ''தோஷி தோஷி'' (உப்புக்கு ஜப்பானிய மொழியில் சொல்லி வந்த பெயர்) என்று சொல்லலானான். உப்பு வந்தது. இயந்திரம் இருக்கும்போது எனக்கென்ன கவலை என்று நினைத்து உப்பை எடுத்து நாக்கில் வைத்துக் கொண்டான். இதமாக இருந்தது. எல்லாம் சிறிது நேரம்தான்! உப்பு வருவது நிற்கவில்லை. ஏனென்றால் இயந்திரத்தை நிறுத்துவது எப்படி என்று தெரியவில்லை ஸொபிடுவுக்கு! ''ஐயோ ஐயோ'' என்று அலறினான். மூட்டை மூட்டையாக உப்பு! படகோடு அவனும் மூழ்கி இறந்தான்.

இயந்திரம் இன்னமும் கடலில் உப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது! இடது பக்கம் திருப்புவார் யாரும் இல்லை. கடல் முழுவதும் உப்பு! உப்பு!! உப்பு!!! ●





பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032



சதுரங்க அட்டையில் உள்ள கட்டங்களின் எண்ணிக்கை 64.

தேங்காய்

தென்னை மரத்தின் சிறப்பு அம்சம் அதன் ஒவ்வொரு பாகமும் உபயோக மாகிறது என்பதுதான். தென்னை மரத்தை சொர்க்கத்தின் மரம் என்று குறிப்பிடுவார்கள். சத்துக்கள் நிறைந்ததும், தொழில் வாய்ப்புகளைப் பெருக்கவும் வல்ல தேங்காயின் முக்கியத்துவத்தை உலகுக்கு உணர்த்துவதற்கும், அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் பாடுபட்டு வரும் உலகளாவிய அமைப்பு **'ஆசிய பசிபிக் கோக்கனட் கம்யூனிடி'**. இதன் தலைமையகம்



இந்தோனேசியா நாட்டின் ஜாகர்தா நகரில் இருக்கிறது. இவ்வமைப்பின் அறிவிப்பின் படி, ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதி **உலக தேங்காய் தினம்** கொண்டாடப்படுகிறது. இதுவே ஆசிய பசிபிக் கோக்கனட் கம்யூனிடி அமைப்பு துவக்கப்பட்ட தினம். இந்தியாவில் 'தென்னை வளர்ச்சிக் கழகம்' உலக தேங்காய் தினம் கொண்டாட்டத்தினை பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

ஆசிரியர் தினம்

உலகின் பல்வேறு நாடுகளும் ஆண்டுதோறும் ஆசிரியர் சமூகத்தைப் போற்றும் விதமாக வெவ்வேறு தினங்களில் ஆசிரியர் தினம் கொண்டாடுகின்றன. உதாரணம்: சீனாவில் ஆகஸ்ட் 27, ரஷ்யாவில் அக்டோபர் 5, அமெரிக்காவில் மே மாதம் முதல் செவ்வாய்க் கிழமை, தாய்லாந்தில் ஜனவரி 16, ஈரானில் மே 2, மலேசியாவில் மே 16, சிங்கப்பூரில் செப்டம்பர் 1, ஆஸ்திரேலியாவில் அக்டோபர் மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமை.

இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவராக டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் பதவி ஏற்றுக் கொண்டபோது, அவரது நண்பர்கள் அவரது பிறந்த நாளை விமரிசையாகக் கொண்டாட விருப்பம் தெரிவித்தார்கள். அப்போது, ராதாகிருஷ்ணன், எனது பிறந்த நாளை 'ஆசிரியர் தினமாக' கொண்டாடினால் நான் மகிழ்ச்சி அடைவேன்' என்று தெரிவிக்க, அதன்படி, அவரது பிறந்த தினமான செப்டம்பர் 5, ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.



இஞ்ஜினியர்கள் தினம்

இந்தியாவின் மிகச் சிறந்த இஞ்ஜினியர்களுள் ஒருவராகப் போற்றப்படுபவர் கர்நாடக

ஓசோன் படலத்தை பாதுகாக்கும் திட்டத்தின் பெயர் மாண்ட்ரீல் புரோட்டகால்.



தெரிந்து கொள்வோம்

எஸ். சந்திரமௌளி

தினம்!



மாநிலத்தைச் சேர்ந்த பாரத ரத்னா டாக்டர் எம். விஸ்வேஸ்வரய்யா. அவரது பிறந்த தினமான செப்டம்பர் 15ஆம் தேதி நம் நாட்டில் இஞ்ஜினியர்கள் தினமாகக் கொண்டாடப் படுகிறது.

விஸ்வேஸ்வரய்யா கர்னாடக மாநிலத்தில் முத்தெனஹள்ளி என்ற சிறு கிராமத்தில் பிறந்தவர். கர்னாடகாவில் உள்ள கிருஷ்ணராஜ சாகர் அணை, பத்திராவதி இரும்பு எஃகு தொழிற்சாலை ஆகியவை இவரால் கட்டப்பட்டவையே!

உலக ஓசோன் தினம்


நாம் வாழும் பூமிக்குப் பாதுகாப்புக் கவசமாக இருந்து பாதுகாத்து வருவது ஓசோன் படலம் என்பது நாம் அறிந்ததே. அந்த ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைகள், இந்த பூமியில் நிலவும் தட்பவெப்ப நிலையில் பலவித அபாய கரமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இது குறித்து உலக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, ஓசோன் படலம் மேலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். அதன்படி, கடந்த பத்தாண்டுகளாக செப்டெம்பர் 16ஆம் தேதி உலக ஓசோன் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

உலகச் சுற்றுலா தினம்

1979ஆம் ஆண்டில் உலக சுற்றுலா அமைப்பின் பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, 1980ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் 27ஆம் தேதி உலக சுற்றுலா தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகச் சுற்றுலா அமைப்பு ஆண்டுதோறும், ஒரு பிரத்யேகமான தலைப்பில் இந்தக் கொண்டாட்டத்தை நடத்தி வருகிறது. உதாரணமாக, 'விருந்தினர்களுக்கு நல்வரவு', 'உலக அமைதிக்குச் சுற்றுலா, இளைஞர்களுக்குச் சுற்றுலா' என்று சிலவற்றைக் கூறலாம்.

இந்த மாதத்தில் வரும் இதர முக்கிய தினங்கள் :

சமஸ்கிருத தினம் செப்டெம்பர் 5.
அல்சைமர் நோய் தினம் செப்டெம்பர் 21.
அகிம்சை தினம் செப்டெம்பர் 21.
ரோஜா மலர் தினம் (புற்று நோயாளிகள் நலனுக்காக), செப்டெம்பர் 22
காது கேளாதோர் தினம் செப்டெம்பர் 26.



விளையாட்டு!



சடுகுடு சடுகுடு என்றே சொல்லி
சகலரை உசுப்பிடும் விளையாட்டு!
பிடிபிடி என்றே எதிரணி வரவே
நழுவிடப் பார்க்கும் விளையாட்டு!

கண்களைப் பொத்தி, மூக்கினைக் கிள்ளி
கனிந்தே ஆடிடும் விளையாட்டு!
கண்ணாம்மூச்சு ரே ரே என்று
கலந்தே ஆடிடும் விளையாட்டு!

உன் குழி சொத்த, என் குழி லாபம்
உற்சாகம் தொடரும் விளையாட்டு!
பதினாறு குழிகளில் இருவர் ஆடிடும்
பல்லாங் குழி விளையாட்டு!

சீட்டை எழுதி, குலுக்கிப் போட்டு
மூளையை கசக்கும் விளையாட்டு!
நிழலில் ஆடி, சோர்வை மறக்கும்
ராஜா ராணி விளையாட்டு!

பாம்பு, ஏணி கூட்டணி நடுவில்
பரம பதத்தின் விளையாட்டு!
சோம்பல் எல்லாம் ஓடிப்போகும்
சொக்கட்டான் தரும் விளையாட்டு!

மாலை நேரம் வந்துவிட்டால்
மனசு கேட்கும் விளையாட்டு!
உடலுக்கு உறுதி தந்து நம்மை
ஊக்கப்படுத்தும் விளையாட்டு!



கன்னிக்கோவில் இராஜா



வீட்டுப் பாடம் படியுங்கள்
விஞ்ஞானத்தை அறியுங்கள்
நோட்டுப் புத்தக சந்தேகத்தை
நொடியில் தீர்க்கும் கம்ப்யூட்டர்!

கேட்டுக் கேட்டுப் பழகுங்கள்
கெட்டதை விட்டு விலகுங்கள்
பூட்டுப் போட்ட மனசுக்குள்
புதுப்புது விஷயம் சேருங்கள்!

கவிஞர் வெ.தமிழழகன்

ஆப்பிரிக்க கிளிகள் சுமார் 100 வார்த்தைகள் பேசும்.



வண்ணக் கிளி

அ.சாம்சன்

வண்ணக் கிளியைப் பாரு
வனப்பு ரொம்ப ஜோரு
தொட்டுத் தொட்டுப் பாடு
தோளில் சுமந்து ஆடு!

செக்கச் சிவந்த மூக்கு
செதுக்கிய கூர்மை அலகு
சிக்கென இருக்கும் கழுத்து
சட்டென திரும்பும் அழகு!

பச்சை வண்ணக் கிளியை
பார்த்து நாமும் மகிழ்வோம்
கொச்சை மொழியைக் கேட்டே
குதித்து குதித்து மகிழ்வோம்!

அக்கா வென்றே அழகாய்
உறவைச் சொல்லி அழைக்கும்
என்னைக் கவர்ந்த கிளியின்
ஏற்றம் பாடி மகிழ்வேன்!

**ஆட்டம் பாட்டம் இதிலுண்டு
அகில உலக நடப்பெல்லாம்
போட்டுப் பார்த்து அறிந்திடலாம்
பார்க்கப் பழகிடு இன்டர் நெட்!**

**நாட்டு நடப்பு முன்னேற்றம்
நல்லது கெட்டது எல்லாமே
நான்கு சுவருள் அமர்ந்தே நாம்
நன்றாய் தினமும் அறிந்திடலாம்!**



கம்ப்யூட்டர் பழகு!

ஆசிய யானையின் ஒரு ஜோடி தந்தங்களின் சராசரி எடை **34** கிலோ.

யானையாரே... யானையாரே!

சுமதியின் அப்பா : வா ராஜா, வா முகில்

முகில் : அங்கிள் என்ன படிச்சிட்டிருக்கீங்க?

அப்பா : யானையைப் பத்தின செய்திகளைப் படிச்சிட்டிருக்கேன்.

ராஜா : அப்படியா! யானைதானே நிலத்தில் வாழக்கூடிய மிருகங்களிலேயே மிகப் பெரியது?

அப்பா : ஆமாம் ராஜா, யானை கிட்டத்தட்ட 10 அடி உயரமும் 5000 கிலோ எடையும் உடையதாக இருக்கும்! யானைகளில் இரண்டு வகை. ஒன்று ஆப்பிரிக்க யானை... இன்னொன்று ஆசிய யானை. இப்போ ஆப்பிரிக்க யானைகளிலேயே பாலைவன யானை, காட்டு யானைன்னு இரு பிரிவுகள் இருக்கிறதா கண்டுபிடிச்சிருக்காங்க.



* இந்திய குட்டி யானை

சுமதி : ஆப்பிரிக்க யானைக்கும் ஆசிய யானைக்கும் என்ன வித்தியாசம்?

அப்பா : ஆப்பிரிக்க யானைகளில் ஆண் யானை, பெண் யானை இரண்டுக்கும் தந்தம் உண்டு. ஆசிய யானை வகையில் ஆண் யானைக்கு மட்டும்தான் தந்தம் உண்டு. ஆப்பிரிக்க யானைக்குச் சற்றே பெரிய காது, அதிக சுருக்கமான தோல், குழிவான முதுகு. ஆப்பிரிக்க யானையின் துதிக்கையில் இரு உதடு போன்ற அமைப்புகள் உள்ளன. ஆசிய யானையின் துதிக்கையில் ஒரு உதடு அமைப்புதான்.

ராஜா : ஓகோ! யானையின் பெரிய காதுகளால் அதுக்கு என்ன பயன்?

அப்பா : காதுகள் வெப்பத்தைக் கடத்தி, யானையைக் குளிர்ச்சியாக வைக்குது. மேலும் எப்போதும் அசைச்சுகிட்டே இருக்கிறதுனால ஒட்டுண்ணிகள், பூச்சிகள்

யானையின் கர்ப்ப காலம் **640** நாட்கள்.



விலங்கியல்

எஸ். நாராயணி

கிட்டேருந்து தப்பிச்சிடுது.

ராஜா : அங்கிள்! யானைக்கு பார்வைத் திறன் குறைவாமே?

அப்பா : ஆமாம்! வாசனை, தொடு உணர்ச்சி, கேட்டல் போன்ற திறன்களோடு ஒப்பிட்டால் பார்வை குறைவுதான். யானை தேங்காய், வாழைப் பழம், மாம்பழம், பனம்பழம் எல்லாம் சாப்பிடும். சில யானைகள் பழங்களின் தோலை உரிச்சு சாப்பிடுமாம்!

முகில் : யானைக்கு மட்டும்தான் தந்தம் இருக்கா?

அப்பா : இல்லை. யானை தவிர 'வால்ரஸ்' என்ற மிருகத்துக்கும் தந்தம் இருக்கு! ஆனா அதோட தந்தம் யானை அளவுக்கு நீளம் இல்லை. தந்தம் நிலத்தைத் தோண்ட, மரங்களைப் பிடுங்க பயன் படுது. மனிதர்களில் இடது கைப் பழக்கம் உள்ளவர்கள் இருப்பது போல, யானைகளிலும் வலது தந்தத்தை அதிகமாகப் பயன்படுத்தும் யானை, இடது தந்தத்தை அதிகமாகப் பயன்படுத்தும் யானை என்று இருவகைகள் உண்டு.

முகில் : யானைகள் உப்பை விரும்பிச் சாப்பிடுமாமே! யானைக்கு உப்பு எங்கே கிடைக்கும்?

அப்பா : குகைகளில் உள்ள உப்பு படிவங்களை யானைகள் தேடிப் போய்ச் சாப்பிடும். சில சமயம் எரிந்து முடிந்த எரிமலைகளின் பக்கத்துல உப்பைத் தேடிச் சாப்பிடும். காட்டில் உள்ள யானைகள் மண்ணைக் கிளறி அதிலே உள்ள உப்பைச் சாப்பிடும். யானை ஒரு நாளைக்கு 150 கிலோ இலைதழைகளைச் சாப்பிடும். ஒரு நாளைக்கு 140 லிட்டர் தண்ணீர் குடிக்கும்.

முகில் : யானை இவ்வளவு பெரிசா இருக்கறது





னால அதனால வேகமா ஓட முடியாது இல்லையா?

அப்பா : அதான் இல்லை. யானை மணிக்கு 48 கிலோ மீட்டர் வேகத்துல ஓடும். யானை கூட்டம் கூட்டமாதான் வாழும். யானைகளின் கூட்டத்துக்குப் பெண் யானை தான் தலைமை வகிக்கும். ஒரு குறிப்பிட்ட வயது அடைந்தவுடன் ஆண் யானைகளைக் கூட்டத்திலிருந்து விரட்டிடும். இறந்த யானைகளை மற்ற யானைகள் சில நேரம் குழி தோண்டிப் புதைக்கும். யானைகள் பலவும், மற்ற யானைகள் இறந்த இடத்துக்கு வந்து, தினமும் ஒரு நிமிஷமாவது நின்னுட்டுப் போகுமாம்! யானைகளுக்குக் கோபம் வந்தால் தரையில துதிக்கையால வேகமாக அடிக்குமாம். தான் கோபமா இருக்கேன்னு மத்த யானைகளுக்குச் சொல்லணும்னா தன்னுடைய தும்பிக்கையின் முனையை அடுத்த யானையின் வாயில வைக்குமாம். ரொம்ப சந்தோஷமா இருந்தால் துதிக்கையை மேலே தூக்கிட்டு, தன்னைத்தானே சுத்துமாம்.

ராஜா : யானை ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் தூங்கும்?

அப்பா : அதானே! தூக்கத்தைப் பத்தி இன்னும் நீ கேக்கலையேன்னு நெனைச்சேன். யானை ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் தூங்கும். இதில், இருபது நிமிஷம் நின்னுகிட்டும், மீதி நேரம் தரையில் படுத்தும் தூங்கும். படுக்கும் போது இலை தழைகளை தலைக்கு தலையணை மாதிரி வைச்சுத் தூங்கும்.

முகில் : யானைகள் என்னென்ன நன்மை செய்யுது?

அப்பா : யானைகள் தங்களுக்காகத் தோண்டும் தண்ணீர்க் குழிகள், மத்த மிருகங்களுக்கும் பயன்படுது. யானைகளின் கால் தடங்கள், அவை ஏற்படுத்திய சிறு குழிகள்ல மழைநீர் சேரும். யானைகளின் உணவு பாதிதான் செரிக்கப்படுது. அதனால யானை சாணத்தின் மூலம் விதைகள் பிற இடங்களில் விதைக்கப்படுது. அது மட்டுமில்ல, யானைச் சாணம் நல்ல உரமாகவும் இருக்கு.


முகில் : யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக்குதுன்னு...

அப்பா : அதுக்கும் காரணம் இருக்கு முகில். மண் துகள்கள் ஒட்டுண்ணிகளை விரட்டும். பூச்சிகளைக் கொல்லும். அப்படியும் பூச்சிகள் சாகலைன்னா காளை கொத்தின்னு ஒரு பறவை இருக்கு. அந்தப் பறவை யானை மேலேயே உட்கார்ந்து பூச்சிகளைச் சாப்பிடும்!

சுமதி : அப்படிப்பட்ட யானைகள் இன்று அழிவைச் சந்திக்குதுங்கிறது வேதனை.

அப்பா : தந்தம், முடிக்காக யானைகள் கொல்லப்படுது. இந்த உலகத்திலே உள்ள ஒவ்வொரு உயிருக்கும் வாழறதுக்கு உரிமை இருக்கு. யானைக்கும் அந்த உரிமை உண்டு! அதை நாம மதிக்கணும்.


ராஜா : ஆமாம் அங்கிள். எத்தனையோ உயிரினங்களை மனுஷன் அழிச்சுட்டான்... மீதி இருக்கறதைப் பாதுகாக்கணும்.



● ஆப்பிரிக்க யானை


குட்டீஸ்
கோகுலம்
உங்கள் சின்னஞ்சிறு கைகள், பளபள கண்கள், சுட்டியான மூளை அனைத்துக்கும் சவால்!


ஜூம்பா
கதை : மேஜிக் மாமா
படம் : தர்மா




இரண்டு படங்களுக்கிடையே எத்தனை
வித்தியாசங்களைக்






வித்தியாசங்கள் உள்ளன கண்டுபிடி!


விடை 48-ஆம் பக்கம்



வண்ணம் தீட்டுங்கள்!





**இந்தப் படத்தை உங்கள்
கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க!**



கண்டுபிடி! கண்டுபிடி!

இந்தக் குடுவைகளில் ஐந்து விஞ்ஞானிகளின் பெயர்கள் ஐந்து நிறங்களில் (எழுத்துக்கள்) சிதறியுள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்!









வழி காட்டுங்கள்!

வர்ஷிணி நாய்க் குட்டியை அடைய வழி காட்டுங்கள்!




இங்கே நான்கு வண்ணத்துப் பூச்சிகளும் அவற்றின் நிழல்களும் உள்ளன. எந்த நிழல் எதற்குரியதென கண்டுபிடியுங்கள்!






இங்குள்ள வித்தியாசமான படங்களைக் கத்தரித்து. சே

கலக்கும் கிராஃபிக்ஸ்!






ட்டுப் புத்தகத்தில் ஒட்டிக்கங்க குட்டீஸ்!

கோகுலம் ஆல்பம்











இங்குள்ள படங்களைப் போல படிப்படியாக வரையுங்கள்; நீங்களும் ஓவியராகுங்கள்!




நீங்களும் வரையலாம்!






புள்ளிகளை இணையுங்கள்!



ஒன்று முதல் 62 வரையிலான புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமையாக்குங்கள்!






வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!

இந்தப் படத்திலிருந்து ஐந்து துண்டுகள் தனியே உள்ளன. அவற்றை வெட்டியெடுத்து, சரியான இடத்தில் ஒட்டுங்கள்!








...போட்டி போட்டுட்டு வருவாங்க. ஆராய்ச்சி செய்ய கோடிக்கணக்குல கொடுத்து இதை வாங்கிட்டுப் போவாங்க. அந்தப் பணத்தை நாம் பிரிச்சுப்போம்.
நோ! இதுவும் ஒரு உயிர். எப்படி வெளிநாட்டுல இருந்து அகதியா வர்றவங்களுக்கு அடைக்கலம் தந்து பத்திரமா சொந்த நாட்டுக்கு அனுப்பறமோ அப்படி இதையும் அனுப்பறது நம்ம கடமை!
ஸாரி...


நினைவாற்றல்!



இந்தப் படத்தை சில நிமிடங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பிறகு 48-ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடையளியுங்கள்.


உங்கள் நினைவாற்றலைத் தெரிந்துகொள்ளுங்கள்!



எத்தனை? எத்தனை?



இங்கே நான்கு நிறங்களில் நிறைய ஊக்குகள் உள்ளன. எந்தெந்த நிறத்தில் எத்தனை எத்தனை உள்ளனவென எண்ணிப் பாருங்கள். விடை அடுத்த பக்கம்!



முற்றும்

விடைகள் பக்கம்!



வித்தியாசங்கள் :

1.சிறுமியின் சட்டை பட்டன் 2.குமிழ்களின் எண்ணிக்கை 3.குப்பியிலிருந்து வரும் புகை 4.பூஜாடியின் கைப்பிடி 5.விசித்திர உருவத்தின் தலைமுடி



கண்டுபிடி! கண்டுபிடி!

1.தாமஸ் ஆல்வா எடிசன் 2.ஐன்ஸ்டீன் 3.ஐசக் நியூட்டன் 4.ஆர்க்கிமெடஸ் 5.மேரி கியூரி

நிழல்கள் எவை?
1-B, 2-D, 3-A, 4-C

எத்தனை? எத்தனை?

கறுப்பு - 16,
வயலட் - 14,
காவி - 15,
பச்சை - 13

நினைவாற்றல்!

1. சிறுவனின் சட்டையில் எத்தனைப் பொத்தான்கள் உள்ளன?

2. வலதுப் பக்கமுள்ள குதிரையின் முகத்தில் 'வார்' இருந்தது. சரியா? தவறா?

3. வேலி கல் தூண்களின் எண்ணிக்கை எவ்வளவு?

4. சிறுவன் கையிலுள்ள பொருளின் நிறம் என்ன?

5. குதிரைகளின் கால்களில் எத்தனை தெரிகின்றன?



★ ஐந்துக்கும் சரியான விடையளித்தால் உங்கள் நினைவாற்றல் பிரமாதம்! மூன்று எனில் பரவாயில்லை! இரண்டு அல்லது ஒன்று எனில் உங்கள் கவனிக்கும் ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்வது அவசியம்!

தமிழில் முதன் முதலில் அச்சில் வந்த நூல் **பைபிள்.**



குட்டீஸ்களின் கலைவண்ணம்!

பதினைந்து வயதேயான குட்டி எழுத்தாளர் **சிபிலா மைக்கேல். சுகானாவுக்கு** வயது பதிமூன்று. ஏழு வயது குட்டியோ குட்டி **வம்சி.** இவங்களோட கலைவண்ணம்தான் **'எதிர்பாராமல் பெய்த மழை'** கதைப் புத்தம்.


சிபிலா மைக்கேல் மலையாளத்தில் எழுதினதை தமிழில் மொழி பெயர்த்திருக்கார் சுகானா. எதிர்பாராமல் பெய்த மழை, காட்டிலுள்ள நண்பன், தேவதைகளின் நாட்டில்... உட்பட பன்னிரண்டு கதைகள். எல்லாம் சின்னச் சின்னக் கதைகள். அழகான கற்பனை! அட்டை உட்பட ஒவ்வொரு கதைக்கும் படம் வரைஞ்சு இருக்கறது வம்சி. இப்படி குட்டீஸ்களைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புத்தகம் புதுமையோடு அழகாகவும் இருக்கு. வாங்கிப் படிச்சீங்கன்னா அசந்து போவீங்க. நல்ல முயற்சி!

கிடைக்குமிடம் : வம்சி புக்ஸ், 19 டி.எம். சாரோன், திருவண்ணாமலை - 606 601. விலை ரூ.30/-



நம்மைச் சுற்றி எவ்வளவோ விநோதங்கள் இருக்கு. அவற்றைப் பற்றி தெரிஞ்சுக்க எத்தனையோ விஷயங்கள் இருக்கு. சொல்ல வேண்டியதை 'போர்' அடிக்காத மாதிரி சுவையாச் சொன்னா ஆர்வமா படிக்கலாம். மனசிலும் ஈஸியா பதியும். அப்படிப்பட்ட புத்தகம் தான் **'வனங்களில் விநோதங்கள்'.** ஆசிரியர் **லதானந்த்.**

காட்டிலுள்ள மரங்கள், விலங்குகள், பறவைகள், பூக்கள் பற்றி வியப்பான செய்தியை 'ரேஞ்சர் மாமா' என்ற கேரக்டர் மூலம் உரையாடலா சொல்றதால படிக்க சுவையாவும் சுலபமாவும் இருக்கு. பக்கத்துக்குப் பக்கம் படங்கள்! வழுவழு தாளில் சிறப்பா அச்சிடப்பட்டிருக்கு.



கிடைக்குமிடம் : விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 600 002. விலை ரூ.70/-



திருக்குறள் முதன் முதலில் **லத்தீன்** மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.



என் பெயர் தென்றல்!

'லொள்... லொள்...!'

தூக்கி வாரிப் போட்டது தென்றலுக்கு! உள்ளேயிருந்து கற்பகம் ஓடி வந்தார்.

''ஏய் டாமி உனக்கு என்ன ஆச்சு? ஏன் ஆனந்தியைப் பார்த்துக் குரைக்கறே?''

ம்ஹூம்! டாமி நிறுத்துவது போல் இல்லை. வாலை அசைத்தபடி வீட்டுக்குள் ஓட ஆரம்பித்தது. தென்றலைத் திரும்பத் திரும்ப பார்த்தபடி குரைத்தது. தென்றலுக்குப் புரிந்து விட்டது. 'டாமி புத்திசாலி. நான் ஆனந்தி அல்ல என்று அதற்குத் தெரிந்துவிட்டது.'

டாமியை வெளியில் தள்ளி கதவை இழுத்து மூடினார் கற்பகம். தென்றல் சோஃபாவின் மீது சாய்ந்து உட்கார்ந்தாள். மனத்துக்குள் மெள்ள பயம் உண்டானது. அதே நேரம் அங்கே ஆனந்தி...

கொஞ்ச நேரம் கஷ்டமாக இருந்தது. பிறகு பழகிவிட்டது. தாத்தாவுக்கு எந்த சந்தேகமும் வந்தது போல் தெரியவில்லை. நன்றாக பேசுகிறார். சிரிக்கிறார். சுடச்சுட தோசை செய்து தருகிறார்.

'என்ன செய்து கொண்டிருப்பாள் தென்றல்? ஒழுங்காக வீடு போய் சேர்ந்திருப்பாளா? அம்மா, அப்பா என்ன சொல்லியிருப்பார்கள்?'

''தென்றல், காட்டுக்குப் போறேன். சுள்ளி எடுக்கணும். வரியா?'' தாத்தா



தாகூரின் புனை பெயர் **பானுசின்ஹா.**




வின் குரல் கேட்டது.

"இதோ வரேன் தாத்தா."

குதித்துக் கொண்டே ஓடினாள் ஆனந்தி. மாலை நேரம். சிலுசிலுவென்று காற்று வீசிக் கொண்டிருந்தது. குதித்து ஓடிய போது, ஆனந்தி போட்டிருந்த குதிரைவால் கொண்டை அழகாக அசைந்து கொடுத்தது.

"ஒரு கூடை எடுத்துக்கோ தென்றல்" என்றார் தாத்தா.

ஆனந்தி உள்ளே சென்று கூடையை எடுத்துக் கொண்டாள். தாத்தாவின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தாள். கால் மணி நேரம் நடந்தபிறகு, இருவரும் அந்த அடர்ந்த காட்டுப் பகுதிக்கு வந்தனர். தாத்தா மாமரத்தை நெருங்கினார். பிறகு, சரசரவென்று மேலே ஏற ஆரம்பித்தார். ஆனந்தி ஆச்சரியத்துடன் கண்களை விரித்து அவரைப் பார்த்தாள். இந்தத் தள்ளாத வயதிலும் எத்தனை சுறுசுறுப்பு!



சில நிமிடங்களில் தாத்தா கிளைகளுக்கு இடையே எங்கோ மறைந்து போனார். குரல் மட்டும் கேட்டது.

"நான் பறிச்சுப்போடற மாங்காயை எடுத்து வச்சிக்க!"

"சரி தாத்தா."

ஆனந்தி கொஞ்சம் தள்ளி நின்று கொண்டாள். 'பொத்பொத்' என்று மாங்காய் கீழே விழத்தொடங்கியது. இருபது காய்கள் விழுந்திருக்கும். தாத்தா மரத்திலிருந்து இறங்கினார்.

தாத்தா தாம் கொண்டு வந்திருந்த துணிப்பையில் மாங்காயைப் போட்டு மூட்டை கட்டினார். ஒரு ஓரத்தில் அதை வைத்துவிட்டு, நடக்க ஆரம்பித்தார்.

தாத்தா எதுவுமே பேசாமல் நடந்து வந்தது ஆனந்திக்கு ஆச்சரியமாக இருந்தது. எப்போது பார்த்தாலும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கும் தாத்தாவுக்கு என்ன ஆனது இன்றைக்கு?

ஆனந்தி ரயிலை விட்டு இறங்குவதற்குக் காரணமாக இருந்த அந்த நீர்வீழ்ச்சியை நெருங்கினார்கள்.

தாத்தா ஆனந்தியை உற்றுப் பார்த்தார். பிறகு, மெலிதாகப் புன்னகை செய்தபடி கேட்டார்.

''நான், இந்த இடம், இந்த வாழ்க்கை எல்லாம் உனக்குப் பிடிச்சிருக்கா?''



ஆனந்தி விழித்தாள். திடீரென்று எதற்காகத் தாத்தா இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறார். எச்சிலை விழுங்கியபடி தலையசைத்தாள் ஆனந்தி.

''உனக்குப் பிடிக்கும்னு எனக்குத் தெரியும்'' சொல்லிவிட்டுச் சிரித்தார் தாத்தா.

''நீ யாரை வேணும்னாலும் ஏமாத்தலாம். ஆனால், என்னை ஏமாத்த முடியாது ஆனந்தி'' என்றார்.

''தாத்தா... நான்...'' அதற்கு மேல் பேசமுடியவில்லை ஆனந்தியால்.

''தாத்தா, என்னை மன்னிச்சுடுங்க. நாங்க செஞ்சது தப்புதான். ஆனா...''

''உஷ், நீ எதுவும் பேச வேண்டாம்.'' தாத்தா ஆனந்தியின் தலைமீது கை வைத்து தடவிக் கொடுத்தார். ''இரண்டு பேரும் என்னமா நாடகம் போட்டீங்க? ஹா ஹா ஹா.''

ஆனந்தி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''நேத்தியே எனக்கு விஷயம் தெரியும். ஆனா, தெரிஞ்ச மாதிரி காட்டிக்கலே. என்னதான் செய்யறீங்க பார்ப்போம்னு சும்மா இருந்துட்டேன்.''

''தாத்தா...''

''நீயோ தென்றலோ இதை என்கிட்ட சொல்லியிருந்தீங்கன்னா, நானே இதுக்குச் சம்மதிச்சிருப்பேன்.''

ஆனந்திக்கு ஆச்சரியமாக இருந்தது.

''பாவம் தென்றல். அவ பிறந்ததுல இருந்து இந்தக் காட்டை விட்டு வெளியில போகலே. எங்களுக்குச் சொந்தம்னு யாரும் இல்லை. அவ வளர்ந்தது எல்லாமே என் கூடதான்'' என்றார்.

''தாத்தா நான் ஒரே ஒரு கேள்வி கேட்டா தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?''

வின்னர்ஸ்!

'விடையைச் சொல்; பரிசை வெல்' போட்டி - 1ல் கலந்து கொண்டு சரியான விடையெழுதியவர்களில் குலுக்கல் மூலம் ரூ.100/- பரிசாகப் பெறும் குட்டி வின்னர்ஸ் :

1. கே.ஏ.கௌதம் - திருச்சி
2. இரா.சக்திப்ரியா - உளுந்தூர்பேட்டை
3. க.காயத்ரி - இராணிப்பேட்டை
4. த.ஞானசெல்வன் - சென்னை
5. டி.பவித்ரா - இளம்பிள்ளை
6. சு.விசால் பாலாஜி - திருநெல்வேலி
7. ச.சந்தானலெட்சுமி - மதுரை
8. ஆர்.தனலட்சுமி - பாளையங்கோட்டை

"கேளு."

"தென்றலோட அப்பா, அம்மா...?"

தாத்தா ஒருமுறை மூச்சை இழுத்து விட்டு, "இரண்டு பேருமே ஒரு ரயில் விபத்துல இறந்துபோயிட்டாங்க. தென்றல் மட்டும் எப்படியோ தப்பிச்சுட்டா."

இருவரும் ஒரு பாறையின் மீது அமர்ந்துகொண்டனர். தாத்தா அந்த சம்பவத்தை விவரித்தார்.

"விடியற்காலை நேரம். பழம் சேகரிக்கிறதுக்காக நான் இந்தப் பக்கம் வந்துட்டிருந்தேன். திடீர்னு காடே அதிர்ந்து போற மாதிரி சத்தம். ஓடி வந்து பார்த்தா ரயில் பெட்டி கவிழ்ந்திருக்கு. அப்ப தென்றல் குட்டிக் குழந்தை. அந்தப் பெட்டியில வந்தவங்கள்ல அவ மட்டும்தான் அதிர்ஷ்டவசமா உயிர் பிழைச்சா. மத்த பெட்டியில இருக்கிறவங்க யாருக்கும் அவளைத் தெரியலை. சரி குழந்தையை எடுத்துக்கிட்டுப் போங்கன்னு சொன்னாலும் கேட்கலை. சரின்னு நானே தூக்கிட்டு வந்துட்டேன்."



ஆனந்தியால் நம்பவே முடியவில்லை. தென்றலுக்குப் பின்னால் இத்தனை பெரிய சோகமா? "அப்படின்னா நீங்க அவளோட உண்மையான தாத்தா இல்லையா?"

தாத்தா தலையசைத்தார். "இல்லை. ஆனா அவளுக்கு அந்த விஷயம் தெரியாது. அவளுக்கு எந்தக் குறையும் வைக்காம ஆசையா வளர்த்துக்கிட்டிருக்கேன். அவ பட்டணத்துல இருந்திருந்தா, உன்னை மாதிரி நல்லா படிச்சிருப்பா!" என்றார்.

ஆனந்திக்கு திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது.

(தொடரும்)

9. ஆர்.கே.கார்த்திக் - திசையன்விளை
10. கு.ராகுல் - குரோம்பேட்டை

சரியான விடைகள் :

1. அபுல் பக்கீர் ஜெயினலாவுதீன் அப்துல் கலாம்
2. நா.வருண்
3. தும்பி
4. பில் கிளிண்டன்
5. கழுதையைப் போல கனைக்க வேண்டுமென நினைத்தான்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!






மகாத்மா காந்தி நடத்திய பத்திரிகையின் பெயர் யங் இந்தியா.



அறிவுக்

சிறுவர்களிடம் அறிவுத் தேடலை வளர்க்க வித்திட்டவர் 'ஆர்தர் மே' என்பவர். இவர் 1875-ஆம் ஆண்டு ஜூலை 21-ல் இங்கிலாந்தில் பிறந்தார். பதினான்கு வயதிலேயே பள்ளிப் படிப்பை விட்ட இவர், பெற்றோர்களின் பராமரிப்பு குறைவினால், தம் வாழ்க்கையைத் தாமே நடத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. கண் பார்வையற்ற ஒருவருக்கு அன்றாடம் செய்தித்தாளில் நாட்டு நடப்பைப் படித்துக் காண்பித்து அவர் தந்த தினக் கூலியில் அரை வயிற்றுக்கும், கால் வயிற்றுக்கும் உணவருந்தினார். நேரத்தைக் கடத்த, தனிமையில் அமர்ந்து பல விஷயங்களை யோசிக்கலானார்.

அவரின் எண்ணங்களையும், கற்பனைகளையும் எழுதி, எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினார். எழுத்து நுணுக்கங்களை அறிந்து எழுத ஆரம்பித்து, தமது இருபதாவது வயதிலேயே 'தி டெய்லி மெயில்' என்கிற பத்திரிகையின் ஆசிரியராக உயர்ந்தார்.



* ஆர்தர் மே

அவரது மனத்தில் 'எங்கே? ஏன்? எப்படி? எதனால்?' போன்ற சந்தேகங்கள், உலக நடப்பு விவகாரங்கள் குறித்து எழுந்து கொண்டேயிருந்தன. 'நமக்குத் தோன்றும் இம்மாதிரி சந்தேகங்கள் சிறுவர்கள் மனத்திலும் தோன்றுமே! அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க தகவல்களைத் திரட்டித் தர வேண்டும்' என்கிற மேலான எண்ணம் எழுந்தது.

அதன் வெளிப்பாடாக 'தி சில்டரன்'ஸ் என்சைக்ளோபீடியா' என்கிற பொது அறிவு சம்பந்தப்பட்ட தகவல் திரட்டுகளைச்

அமெரிக்காவின் முதல் பத்திரிகை **நியூயார்க் டைம்ஸ்.**

சேகரித்து, பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெளியிட்டார்.

முதன் முதலில் சிறுவர்களுக்காக வெளிவந்த தகவல் கலைக் களஞ்சியமாக விளங்கியதால் அமோக வரவேற்பைப் பெற்றது. இதன் தொகுப்பு கள், பன்னிரண்டு பதிப்புகளாக வெளியாகி எட்டு இலட்சம் புத்தகங்கள் விற்றுத் தீர்ந்தன.




சிறுவர்கள் தங்களின் அறிவுத் திறனை வளர்த்துக் கொள்ள கருவியாக இருந்த ஆர்தர் மே, நாற்பது புத்தகங்களை எழுதினார். 'ட்ரீம் ஆப் இங்லாண்ட்', 'டெர்பிஷைர்', 'சர்ரே' போன்றவை பிரசித்தி பெற்ற அவரின் நூல்கள்.

எல்லா சிறுவர்களுமே பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்கிற தம்


1964ல் வெளிவந்த 'ஆர்தர் மே' யின் சிறுவர்கள் கலைக் களஞ் சியத் தொகுப்பு இன்றும் அழியாப் புகழுடன் பலரின் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது.

களஞ்சியம் ஆர்தர் மே!



தீவிரமான எண்ணத்தைச் செயலாக்க 'ஆர்தர் மே' உருவாக்கிய 'சில்ட்ரன்'ஸ் நியூஸ் பேப்பர்' என்கிற இதழ், வாரத்துக்கு ஐந்து லட்சம் பிரதிகள் விற்று பலரின் ஆர்வத்துக்கு அடிகோலியது.

'ஆர்தர் மே'-இன் அறிவுத் தொகுப்பானது, பிரெஞ்சு, இத்தாலி, ஸ்பெயின், சீனம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது. 1943ஆம் ஆண்டு மே 27ல் தாம் நினைத்ததை முடித்த களிப்பின் நிறைவில் இயற்கை எய்தினார்.





உறுப்பினர் பக்கம்

நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகி விட்டீர்களா? அப்படியானால் எடுங்கள் போனாவை! உங்களுக்காக மூன்று பக்கங்களில் 'உறுப்பினர் பக்கம்' என்ற புதிய பகுதி தொடங்குகிறது. **குட்டிக்கதை, ஜோக்ஸ், கவிதை, துணுக்குகள், ஓவியம்** என எதுவாக இருந்தாலும் எழுதியனுப்பலாம். சிறந்தவை தேர்வாகும். உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கோகுலம், (உறுப்பினர் பக்கம்)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

குறிப்பு : இதுவரை நீங்கள் உறுப்பினர் கூப்பன் அனுப்பவில்லையா? உடனே பூர்த்தி செய்து அனுப்புங்கள்! உங்கள் நண்பர்களிடமும் விஷயத்தைச் சொல்லி அவர்களையும் உறுப்பினராக்குங்கள். அடுத்தடுத்த இதழ்களிலும் கூப்பன் வெளியாகும். நகல் கூடாது. அசல் கூப்பன் மட்டுமே ஏற்கப்படும். எதிர்ப் பக்கம் உறுப்பினர் பட்டியல்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

புகைப்படம்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

டால்பின்கள் தோன்றி 45 மில்லியன் வருடங்களாகின்றன.

கோகுலம்

சிறுவர் சங்கம்!



வணக்கம் குழந்தைகளே!

கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரும் உறுப்பினர்கள் எண்ணிக்கை கூடிக் கொண்டே செல்கிறது. இதோ பட்டியல் தொடர்கிறது. இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில் உறுப்பினர்களின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இதே இதழின் வேறு பக்கத்தில் கூப்பன் வெளியாகியுள்ளது. இதுவரை சேராதவர்கள் கூப்பனை அனுப்பலாம். அடுத்த இதழிலும் பட்டியல் வெளியாகும். அனைவருக்கும் நன்றி!

அன்புடன்
ஆசிரியர்

51) எஸ்.சௌந்தர்யலக்ஷ்மி, மூன்றாம் வகுப்பு, குளூனி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம்

52) ஜி.ஹரிஹரன், ஏழாம் வகுப்பு, மகாத்மா காந்தி பள்ளி, திருச்சி

53) எஸ்.மினுமஞ்சரி, நான்காம் வகுப்பு, குளூனி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம்

54) அ.அபிராமி, நான்காம் வகுப்பு, ஊ.ஒ.தொடக்கப் பள்ளி, திருப்புலிவனம்

55) ரா.கீர்த்திராமன், பதினொராம் வகுப்பு, தூய இருதய மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம்

56) எஸ்.அனுசத்யா, பத்தாம் வகுப்பு, கேந்திர வித்யாலயா, சென்னை - 55

57) பஞ்ச் சிவரஞ்சனி, இரண்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சேலம்

58) ர.மோகன்ராம், எட்டாம் வகுப்பு, சிட்டி இன்டர்நேஷனல் பள்ளி, புனே

59) ந.அனிதா, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி, இராசிபுரம்



60) எஸ்.எஸ்.ஜாஸிம் ஃபஹத், ஆறாம் வகுப்பு, நேஷனல் அகாடமி பள்ளி, கீழக்கரை

61) ஆர்.லட்சுமிப்ரியா, பத்தாம் வகுப்பு, திரு.வா.தி.மா.மு. மேல்நிலைப் பள்ளி, புளியம்பாக்கம்

62) பி.ஜெயக்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

63) ரா.ஸ்ரீவிஷ்ணு பிரதீபலட்சுமி, மூன்றாம் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், இராஜபாளையம்

64) ச.கனக சுப்புலெட்சுமி, ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மூலைக்கரைப்பட்டி

65) எஸ்.செந்தில்நாதன், ஐந்தாம் வகுப்பு, சர் சிவசுவாமி கலாலயா, சென்னை - 4

66) எஸ்.திவ்யா, ஒன்பதாம் வகுப்பு, கிரீன் பார்க் மெட்ரிக் பள்ளி, ஆத்தூர்

67) ஆ.அகமது அலி, மூன்றாம் வகுப்பு, செயின்ஸ் மெட்ரிக் பள்ளி, களக்காடு

68) ஜொஹறா மிஸிரியா, எட்டாம் வகுப்பு, முஸ்லீம் மகளிர் கல்லூரி, இலங்கை

69) வெ.ஸ்ரீராம், எட்டாம் வகுப்பு, சி.கே.டி. மெட்ரிக் பள்ளி, குமாரகிரி

70) வி.மதுமிதா, ஆறாம் வகுப்பு, பி.எஸ்.எஸ்.எஸ். பள்ளி, சென்னை - 28

71) ஆ.திலகன், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சங்கரா வித்யாஷ்ரம் பள்ளி, திருவான்மியூர்

72) கு.க.லாவண்யா, மூன்றாம் வகுப்பு, சின்மயா வித்யாலயா, சேலம்

73) ஆ.புஷ்பராஜ், மூன்றாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஆற்காடு

74) கே.எஸ்.மிதிலா, பத்தாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திர மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

75) என்.ஆர்.ரஞ்சனி, ஆறாம் வகுப்பு, ஜி.ஜி.என்.மெட்ரிக் பள்ளி, சென்னை - 94

76) வே.முத்துராஜ், பன்னிரண்டாம் வகுப்பு, இராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளி, வல்லம்

77) வி.பி.மதிமலர், பன்னிரண்டாம் வகுப்பு, உலக மீட்டர் மேல்நிலைப் பள்ளி, திசையன்விளை

78) எஸ்.ஜி.எஸ். ஹரிஹர பாலன், பதினொராம் வகுப்பு, மேரி மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உசிலம்பட்டி

79) எஸ்.சுப்ரியா, ஏழாம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யாலயா, சென்னை - 14

80) அ.ஆனந்த விக்னேஷ், எட்டாம் வகுப்பு, நிர்மலா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம்

81) எஸ்.சுபலட்சுமி, பதினொராம் வகுப்பு, புனித ஜோசப் உயர்நிலைப் பள்ளி, நாகர்கோவில்



பட்டியல்

82) ச.ஹரிகுமார், எட்டாம் வகுப்பு, கிரைஸ்ட் தி கிங் மெட்ரிகுலேஷன் பள்ளி, கும்பகோணம்

83) ஸ்ரீநிதி ராமகிருஷ்ணன், மூன்றாம் வகுப்பு, புனித பேட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுச்சேரி

84) கோ.இளம்பாரதி, நான்காம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா மெட்ரிக் பள்ளி, முத்தூர்

85) மெ.உண்ணாமலை, பதினொராம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோவை

86) ஆர்.பிரசாந்த், ஏழாம் வகுப்பு, செயின்ட் ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்

87) மனிஷா மணிமாறன், ஏழாம் வகுப்பு, பாலகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி, வடக்கன்குளம்

88) பா.சூரியபிரகாஷ், பத்தாம் வகுப்பு, மா.க.வி. அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரணி

89) டி.ஈஸ்வரி, ஏழாம் வகுப்பு, டேனியல் தாமஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, திசையன்விளை

90) ம.பாலசுப்ரமணியன், எட்டாம் வகுப்பு, எஸ்.ஆர்.எம்.பள்ளி, அம்பத்தூர்

91) எம்.மரகதவேலன், ஏழாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பனப்பாக்கம்

92) ச.ஜனனி பகவதி, ஏழாம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி

93) எல்.ஹரிராமபாலசுப்ரமணியன், ஏழாம் வகுப்பு, தி.தி.நி.க. நடுநிலைப் பள்ளி, தேமான்குளம்

94) சி.முத்தாத்தாள், ஐந்தாம் வகுப்பு, லதாங்கி வித்யாமந்திர், பொள்ளாச்சி

95) சு.ஆதிகோபிநாத், முதலாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் பள்ளி, வீரசிகாமணி அஞ்சல்

96) நா.வைஷ்ணவி, ஐந்தாம் வகுப்பு, வேதவல்லி வித்யாலயா, வாலாஜாபேட்டை

97) வி.கிருஷ்ணன், ஏழாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி, திருச்சி

98) செ.ஆனந்தி, பதினொராம் வகுப்பு, காந்தி மேல்நிலைப் பள்ளி, ந.கந்தம்பாளையம்

99) சு.அரவிந்த் சர்மா, பத்தாம் வகுப்பு, எஸ்.ஆர்.டி.எஃப். விவேகானந்தா வித்யாலயா, சென்னை - 44

100) எம்.செல்வபிருந்தா, பதினொராம் வகுப்பு, காந்தி கலா நிலையம், உடுமலைப்பேட்டை





என்ன

மரங்கள் அடர்ந்த ஒருகாடு
அந்த இடத்தில் இருகூடு
சிலந்தி ஒன்றைக் கட்டியது
மற்றது நெய்தது பட்டுப்புழு!

சிலந்தி கூட்டை விரைவாக
சிலமணி நேரத்தில் கட்டிவிட
பட்டுப் புழுவோ பரிதாபம்
பலநாள் முயன்று பின்னியது!

இரண்டும் நெடுநாள் நண்பர்களே
இருந்தும் சிலந்தி கர்வத்தால்
''நண்பா நான்பார் என்கூட்டை
எத்தனை விரைவாய்க் கட்டிவிட்டேன்!

நீயோ நெடுநாள் பின்னுகிறாய்!
இருந்தும் இன்னும் முடியவில்லை!
என்றோ கூட்டை முடிப்பாய்நீ?''
என்றே ஏளனம் பண்ணியது!

பட்டுப் புழுவோ வெகுளாமல்
''உந்தன் கூட்டை வெகுவிரைவாய்
கட்டி விட்டாய் உண்மைதான்
ஆனால் அதனால் என்னபயன்?

ஒரு பட்டுப்புழு சுமார் 800 மீட்டர் இழையை உண்டாக்கும்.



கதைப் பாடல்

வளர்கவி

உந்தன் கூட்டை எல்லோரும்
ஒதுக்கி விடுவர் ஆனால்பார்
எந்தன் கூட்டை எல்லோரும்
ஏற்றுக் கொள்வர் புரிகிறதா?

வேகம் மட்டும் வாழ்க்கையிலே
வெற்றி பெற்றிடப் போதாது!
ஒருவருக் காவது நம்மாலே
உதவி இருந்தால் பெரும்பேறு!

வாழ்க்கை என்பது மற்றவர்க்கு
பயந்தரும் வண்ணம் வாழ்வதுதான்!
'வாழ்ந்தோம் மறைந்தோம்' என்றிருந்தால்
யாருக் கதனால் என்ன பயன்?''

என்றே கேட்டது பட்டுப்புழு!
ஏற்றுக் கொண்டது சிலந்தியும்தான்!
நாமும் அதனால் பிறருக்கு
நல்லது செய்து வாழ்வோமே!



பயன்?



இ. கோகுல்,
நான்காம் வகுப்பு,
தொன்போஸ்கோ மேல்நிலைப் பள்ளி,
தஞ்சாவூர்.



ஏ. சுவாதி,
ஏழாம் வகுப்பு,
முருக தனுஷ்கோடி மகளிர்
மேல்நிலைப் பள்ளி, சென்னை.

இ. இராஜேஷ்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அ.அப்பாவு தேவர் மேல்நிலைப் பள்ளி,
அம்மாபேட்டை.



பயிற்றுவித்தவர் **தியோடர் ஜென்சன்**



உங்கள் கைவண்ணம்




மு. மேகலா சாந்தி,
பதினொராம் வகுப்பு,
க்ஷத்திரிய நாடார் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி, கமுதி.



பி. ஜெயக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்.



ச. எதுகிரிராஜன்,
இரண்டாம் வகுப்பு,
பி.எஸ். சீனியர்
செகண்ட்ரி பள்ளி,
சென்னை.



ஒரு ராணித் தேனீ ஒரு நாளில் 1,500 முட்டைகள் இடும்.



தெரியுமா?

க. ஆர்த்தி
(உறுப்பினர் எண் : 40)

ஆஸ்திரேலியாவில் உள்ள சிவப்பு கங்காரு ஒரே தாவலில் 27 அடி பாயும்.

எந்த விலங்கினத்துக்கும் இல்லாத ஒரு உடலமைப்பு பூனைக்கு உண்டு. அதாவது, பூனைக்கு இரு ஜோடி குரல் வளைகள் உள்ளன.

உலகிலேயே முதன்முறையாக ஸ்காட்லாந்தில் தான் 1816-ம் ஆண்டில் போலீஸ் நாய் துப்பறியும் துறையில் பயன்படுத்தப்பட்டது.

ஒரு பவுண்ட் எடையுள்ள தேன் சேமிக்க ஒரு தேனீ சுமார் 43,000 மைல்கள் பயணம் செய்யும். ஒரு பவுண்ட் தேனில் 29,184 துளிகள் தேன் இருக்கும்.

வெட்கம் எனும் உணர்வு உள்ள ஒரே இனம் மனித இனம் மட்டுமே!



ஹை ஜம்ப்!







இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர் வில்லியம் ஹார்வே.



மருந்து உருவாகும் கதை!

யார்?

'புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கென்றே ஒவ்வொரு நாட்டிலும் அரசு மற்றும் தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், மருந்து நிறுவனங்கள் இருக்கின்றன. மருத்துவத்தில் மேற்படிப்பு படித்தவர்கள், விவசாயம், விலங்கியல், உயிர் வேதியியல், மருந்தியல், மெடிக்கல் பயோடெக்னாலஜி படித்தவர்கள் - இப்படி பல துறையினர் ஒரு குழுவாக இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள்.

எதிலிருந்து?

நம் நாட்டைப் பொறுத்தவரை தாவரங்களிலிருந்துதான் அதிக அளவில் மருந்துகளைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்தியாவில் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்ட தாவரங்கள் மருத்துவ குணம் கொண்டவை. இவற்றுக்கு 'மூலிகைத் தாவரங்கள்' என்று பெயர். இவற்றின் வேர், தண்டு, இலை, பட்டை, பூக்கள் என்று பல பகுதிகளிலிருந்து மருத்துவ குணமுள்ள மூலப் பொருட்களைக் கண்டுபிடித்து மருந்தைத் தயாரிக்கிறார்கள். தரைத் தாவரங்கள் தவிர, கடற் தாவரங்கள், விலங்கு



கள், நுண்ணுயிரிகள், பூஞ்சைகள், கனிமங்கள், வேதிப் பொருட்கள், மரபணுக்கள் போன்றவற்றி லிருந்தும் மருந்துகளைக் கண்டு பிடிக்கிறார்கள்.



வரலாறு

புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கும் முறை பண்டைய பாபிலோனியாவில் கி.மு.1700ல் தொடங்கியது. முந்தைய காலங்களில் சீனர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், இந்தியர்கள், மத்திய தரைக்கடல் பகுதியைச் சார்ந்தவர்கள் ஈயம், ஆர்சனிக் போன்ற கனிமங்கள் மற்றும் இயற்கை மூலிகைகளிலிருந்து மருந்தைக் கண்டுபிடித்தார்கள். 1600ஆம் ஆண்டு இந்தியாவுக்குக் கிழக்கிந்திய கம்பெனி யினர் வந்தனர். அவர்களின் வருகையால் மருத்துவத் துறைக்கு ஒரு நன்மை கிடைத்தது. கிழக்கிந்திய கம்பெனியினர் பல கப்பல்களில் பல மாதங்கள் பயணம் செய்து இந்தியாவுக்கு வந்தபோது, பெரும்பாலோருக்கு 'ஸ்கர்வி' என்ற நோய் வந்தது. ஆனால், 'ஜெனரல் ஜேம்ஸ் லான்காஸ்டர்' காப்டனாக இருந்த கப்பலில் வந்தவர்களுக்கு இந்த நோய் இல்லை. காரணம், அந்தக் கப்பலில் வந்தவர்களுக்குத் தினமும் எலுமிச்சைச் சாறு தந்திருக்கிறார் அவர். அப்படியென்றால் எலுமிச்சைப் பழத்தில்தான் விஷயம் இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்தபோது, எலுமிச்சையில் வைட்டமின் சி வேதிப்பொருள் உள்ளது என்றும், அது ஸ்கர்வி நோயைக் குணப்படுத்துகிறது என்றும் உறுதியானது. உடனே எலுமிச்சை யிலிருந்து வைட்டமின் சி மாத்திரை தயாரிக்கப்பட்டது.





இப்போது...

இயற்கை மருந்துகளின் வேதிக் கட்டமைப்புகளை ஆராய்ந்து அவற்றைப் போலவே செயற்கையாக வேதிப் பொருட்களைக் கண்டுபிடிப்பதுதான் இப்போதைய நடைமுறை. இரண்டு வேதிப் பொருட்களைக் கூட்டிணைத்து ஒரு புதிய மருந்தைத் தயாரிக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய மாலிக்குலர் பயாலஜி, பயோடெக்னாலஜி, கம்ப்யூட்டர் போன்ற நவீன அறிவியல் துறைகள் மருத்துவத் தொழில்நுட்பம் வளர்வதற்கு வெகுவாக உதவுகின்றன. இதன் மூலம் ஒரு மருந்தின் மூலக்கூறுகளைச் சிறிதளவு மாற்றி அமைத்து, செயலாற்றல் மிக்க பல புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்க முடிகிறது. இன்று புழக்கத்தில் இருக்கும் பல்வேறு வகையான வீரியமிக்க நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள், வலி நிவாரணிகள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவையே!

மரபணுப் பொறியியல் மூலம் பழுதான மரபணுக்களை மாற்றி அமைத்து இன்சுலின், வைட்டமின்கள், தடுப்பூசிகள், ஹார்மோன்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஜீனோமிக்ஸ் எனும் மரபணு அறிவியல் வழியாக 4000க்கும் மேற்பட்ட பாரம்பரிய நோய்களை 'மரபணு மாற்றுச் சிகிச்சை'

மூலம் குணப்படுத்த முடியும் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். கணினி தொழில்நுட்பத்தால் பழைய மருந்தின் அமைப்பையும் செயல்பாட்டையும் புதிய மருந்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, குறைந்த செலவில் அதிக அளவில் மருந்துகளை உற்பத்தி செய்கிறார்கள். புதிய மருந்துகளை வடிவமைக்கிறார்கள். தூய்மைப்படுத்துகிறார்கள். தரப் படுத்துகிறார்கள்.

மருந்துக்கான மூலப் பொருளைக் கண்டுபிடித்த உடனே அதை நோயாளிகளுக்குத் தரமுடியாது. மருந்தைக் கண்டு பிடித்த நிறுவனம், நம் மத்திய அரசிடம் புதிய மருந்தின் விவரம் தெரிவித்து, அதற்கான 'பேடண்ட்' உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அந்த மருந்தைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்த அனுமதி பெற வேண்டும். முதலில் எலி, சுண்டெலி, சீமைப் பெருச்சாளி, முயல், நாய், பூனை, குரங்கு போன்ற விலங்குகளுக்குக் குறிப்பிட்ட நோயை ஏற்படுத்தி, அவற்றுக்குப் புதிய மருந்தைத் தந்து சோதிப்பார்கள். இதன் மூலம் மருந்து எவ்வளவு பலன் தருகிறது. எத்தனை நாளில் நோய் குணமாகிறது. மருந்தின் அளவு என்ன? உடலுக்குக் கெடுதல் தருமா? மற்ற மருந்துகளோடு சேர்ந்தால் பின்விளைவு வருமா? போன்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். இதில் முழு திருப்தி கிடைத்த பின்பு, மருந்தை நோயாளிகளிடம் பரிசோதித்துப் பார்ப்பார்கள். இப்படி ஒரு மருந்தைக் கண்டுபிடிக்க சுமார் பத்து ஆண்டுகள் வரை ஆகும். இதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும்.

வகைகள்!

ஒரு மருந்தின் மூலப் பொருளை அப்படியே நோயாளிக்குத் தர முடியாது. சப்பாத்தி மாவுடன் தண்ணீர் கலந்து பிசைவது போல மருந்தின் மூலப் பொருளோடு 'ஸ்டார்ச்' அல்லது 'லேக்டோஸ்' எனும் இணைப்புப் பொருளைச் சேர்த்து, பசைபோல் தயாரித்து, உலர வைத்து, சிறு துகள்களாக்கிப் பவுடர் செய்து ஓர் இயந்திரத்தில் கொடுத்து, வட்டம், சதுரம், செவ்வகம், உருண்டை என்று பல வடிவங்களில் மாத்திரைகளை வடிவமைத்து விற்பனைக்கு அனுப்புவது தான் நடைமுறை. மாத்திரைக்கு வெள்ளை நிறம் தருபவை இந்த இணைப்புப் பொருள்கள் தான்! மேலும், ஈரம் பட்டு மாத்திரைகள் கெட்டுப் போகாமல் இருக்க அவற்றை அலுமினியத் தாளில் அடைத்து விற்கிறார்கள். சில மருந்துகளை 'ஜெலாட்டின்' எனும் பொருளால் ஆன குழாய் குப்பிகளில் அடைக்கிறார்கள்.


உடலில் மருந்து உறிஞ்சப்படும் விதம், நோயின் தன்மை, நோயாளியின் தேவை ஆகியவற்றைப் பொருத்து, மருந்தானது மாத்திரை, சிரப், ஊசி போன்ற வடிவங்களில் தயாரிக்கப்படுகிறது. நோய் முற்றி விட்டால் மாத்திரை பலன் தராது. ஊசி மருந்துதான் பலன் தரும்! ●



புத்திசாலி பாபு!

கதை : தஸ்மிலா. கீழக்கரை　　　　படம் : பிள்ளை




மேலே வந்ததும்...
பசியோடு முயலைத் துரத்தி வந்தபோதுதான் இப்படி யாகிவிட்டது. நீண்ட நேரம் புதைகுழியில் இருந்தேன். ஆகவே உன்னைத் தின் றால் பாவமில்லையென நினைக்கிறேன்.
அப்போது அங்கே வந்த ஒரு குள்ளநரி விஷயத்தை அறிந்து...
புலி சொல்வதில் தப்பில்லை. பசிக்கு வேறு என்ன செய்வதாம்?
ஹி... ஹி... நமக்கும் மிச்சம் கிடைக்கும்.
பாபு யோசித்தான.
இவர்களிடம் நியாயம் பேசிப் பயனில்லை. தந்திரத்தால்தான் வெல்ல வேண்டும்.
உங்களுக்குச் சாப்பாடுதானே வேண்டும்? ஒரு வழி சொல்கிறேன்.
என்னிடம் நிறைய ஆடுகள் இருக் கின்றன. காட்டின் எல்லையில் தான் என் வீடு. அங்கே வந்தால் நான்கு ஆடு களை மூட்டை கட்டித் தருகிறேன்.
உன்னை எப்படி நம்புவது?
பாபு குள்ளநரியிடம்...
எப்படியாவது உதவி செய். உனக்குத் தனியாக ஒரு கொழுத்த ஆட்டைத் தருகிறேன்.
ஏய்! அங்கே என்ன கிசு... கிசு...!


பாபுவின் தந்திரத்தில் மயங்கிய குள்ளநரி புலியிடம்...
புலியண்ணே, இவன் சொல்ற மாதிரி செய்துதான் பார்ப்போமே! கிடைச்சா நாலு ஆடு. இல்லைன்னா அடுத்த முறை இவன் வராமலா போவான்? அப்போ கவனிச்சுப்போம். என்ன சொல்றீங்க?
நீ சொன்னா சரியாத்தான் இருக்கும்..
மூவரும் காட்டின் எல்லையை அடைந்தனர்.
அதுதான் என் வீடு. நீங்கள் இங்கேயே இருங்கள். ஆடுகளுடன் வருகிறேன்.
ஏமாற்ற நினைத்தால் வீட்டுக்கு வந்து குடும்பத்தையே வேட்டையாடி விடுவேன். ஜாக்கிரதை!
வீட்டுக்கு வந்த பாபு...
என்னையே மிரட்டுகிறீர்களா? உங்களுக்குச் சரியான பாடம் புகட்டுகிறேன். காளையா, உனக்கு வேலை வந்து விட்டது.
சற்று நேரத்தில்...
வந்துவிட்டேன்! இதோ ஆடுகளைக் கொண்டு வந்துள்ளேன்.
சபாஷ்! சொன்ன மாதிரி வந்து விட்டாயே!
அவனை அப்புறம் பாராட்டு. பசிக்கிறது. மூட்டையைப் பிரி.
இதோ.


குள்ளநரி மூட்டையைப் பிரித்ததும்...
வவ்!
ஆ!
ஓடு!
ஓடு!
புலியண்ணே, நரித்தம்பி ஏன் ஓடறீங்க? சாப்பாடு வேணாமா? உங்களுக்காக எவ்வளவு ஆசையா கொண்டு வந்தேன். ஹா.. ஹா...!
நாய் திரும்பி வர...
சபாஷ் காளையா! அசத்திட்டே அசத்தி! வா போகலாம்.

ரோ...ரோ...ரோ... ரோபோ!

ஜப்பான் நாட்டில் 'எக்ஸ்போ 2005' என்ற தொழில் நுட்பக் கண்காட்சி 2005ஆம் ஆண்டு நடைபெற்றது. பல் வேறு உலக நாடுகளின் முன்னணி தொழில் நிறுவனங்கள் அந்தக் கண்காட்சி யில் பங்கேற்றன. லட்சக்கணக்கான தொழில்துறையினரும், சுற்றுலாப் பயணி களும் அந்த கண்காட்சியைக் காண வந்திருந்தார்கள். எக்ஸ்போ கண்காட்சியில் டொயோட்டா நிறுவனத்தின் ஸ்டாலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு இசை நிகழ்ச்சி அனைவரையும் மிகுந்த ஆச்சரி யத்தில் ஆழ்த்தியது.

கண்களை மூடி கொண்டுவிட்டால் கைதேர்ந்த மேற்கத்திய இசை வல்லுனர்கள் சேர்ந்து அற்புதமான இசையை வழங்கிக் கொண்டிருக்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றும். உண்மையில் மேடையில் இசைக் கருவிகளை வாசித்துக் கொண் டிருந்தவர்கள் மனிதர்களே இல்லை; ரோபோக்கள் என்ற இயந்திர மனிதர்கள் தான்! இது ரோபோக்கள் தொழில் நுட்பத் தில் ஜப்பான் நாட்டில் நிகழ்த்தப்பட்டுள்ள சாதனையின் ஒரு துளிதான்!

ஜப்பான் நாட்டின் பல்வேறு தொழிற் சாலைகளில் ஏராளமான ரோபோக்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஜப் பானின் முன்னேற்றத்தில், அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், ரோபோக் களுக்கு முக்கிய இடமுண்டு!

ரோபோ என்பது செக்கோஸ்லோ வேக்கிய மொழிச் சொல். 1921ஆம் ஆண் டில் 'கார்பெல் காபெக்' என்ற செக் கோஸ்லோவேக்கிய எழுத்தாளர் தன் னுடைய நாடகத்தில் ரோபோ என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். நாட கத்தின் கதை இயந்திர மனிதனைப்



ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு **1913.**



கட்டுரை

கௌதம் ராம்

பற்றியது. ஒருவர், இயந்திர மனிதன் ஒருவனை உருவாக்குகிறார். கடைசியில், அந்த இயந்திர மனிதனாலேயே அவருக்கு மரணம் ஏற்படுகிறது. நாடகத்தின் தலைப்பு : ரூசம்ஸ் யுனிவர்சல் ரோபோ.

1941ஆம் ஆண்டில், அறிவியல் நாவல் எழுத்தாளரான ஐசக் அசிமோவ் ரோபோ தொழில் நுட்பத்துக்கு 'ரோபோடிக்ஸ்' என்று பெயரிட்டு, வருங்காலத்தில் தொழிற்சாலைகளில் ரோபோக்கள் ஆட்சி செலுத்தும் என்று கணித்து எழுதினார்.

1956ல், ரோபோக்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை துவக்கப்பட்டது. 1961ஆம் ஆண்டு, அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ் கம்பெனி, முதன்முதலாக தங்கள் நியூ ஜெர்சி நகர தொழிற்சாலையில் ரோபோக்களைப் பயன்படுத்தியது. அந்த ரோபோவுக்குப் பெயர் **'யுனிமேட்'**. அதனைத் தொடர்ந்து தொழிற்சாலைகளில் ரோபோக்களின் பயன்பாடு அதிகரிக்க ஆரம்பித்தது. மற்றொரு பக்கம், ரோபோக்கள் குறித்த ஆராய்ச்சிகள் தீவிரமடைந்தன. ரோபோடிக்ஸ் தொழில் நுட்பத்தில் பல புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன.

இன்று உலகத்தில் ரோபோக்கள் செய்யாத வேலை கிடையாது. பல்வேறு தொழிற்சாலைகளிலும் பலவிதமான வேலை





களைச் செய்கின்றன. பிரான்ஸ் நாட்டில் ரயில்கள் ஓட்டுகின்றன. போர் நடைபெறும் நாடுகளில், தரையில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளையும், தீவிரவாதிகள் வைக்கும் குண்டுகளையும் செயலிழக்க வைக்க ரோபோக்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானில் நிலநடுக்கத்தால் இடிந்து விழும்





கட்டட இடிபாடுகளுக்கு இடையில் சிக்கிக் கொண்டவர்களைக் காப்பாற்ற, மீட்புப் படையினர் ரோபோக்களைப் பெரிதும் நம்புகிறார்கள். கனல் பொங்கும் எரிமலைப் பகுதிகளுக்குச் சென்று மீட்புப் பணியாற்ற ரோபோக்கள் உதவுகின்றன.

உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் கடும் வெப்பம், நச்சுத் தன்மை வாய்ந்த ரசாயனங்கள் போன்றவை சம்பந்தப்பட்ட பணிகளிலும் ரோபோக்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. இன்று உலகில் பயன்படுத்தப்படும் ரோபோக்களுள் தொண்ணூறு சதவிகிதம் தொழிற்சாலைகளில்தான் இருக்கின்றன!



ரோபோக்களைப் பயன்படுத்துவதால் வேறு என்ன நன்மைகள்?

ரோபோக்கள் தயாரிக்கும் பொருட்கள் ஒன்று போலவே தரம் கொண்டு இருக்கும். ஜப்பான் போன்ற மக்கள் தொகை குறைவான நாடுகளில் மனித வளம் போதுமான அளவுக்கு இருக்காது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் ரோபோக்கள் தொழில் துறைக்கு வரப்பிரசாதமாக அமைகின்றன.

●


கோகுலம்
அடுத்த இதழ்...
அக்டோபர்
2007
விளையாட்டுச் சிறப்பிதழ்!
பல்லாங்குழி
முதல்
பாட்மிண்டன்
வரை...
சடுகுடு முதல்
செஸ் வரை...
விளையாட்டுகள்
தோன்றிய
வரலாறு,
விதிமுறைகள்,
சுவையான
தகவல்கள்...
சாதனை
படைத்த
வீரர்களின்
கதைகள்!
இப்பவே
ரெடியா
இருங்க
குட்டீஸ்!



பூமிக்கும் சூரியனுக்கும் இடையேயான தூரம் 148 மில்லியன் கிலோ மீட்டர்.

மா. கண்ணன்
திருச்சி.

வாகனம் போகலாமா?



''நான் மார்க் கம்மியா வாங்கினா எங்கப்பாவுக்கு மூக்குக்கு மேல கோபம் வரும்.''

''அது பரவாயில்லையே, எங்கப்பாவுக்கு என் மேலதான் கோபம் வரும்.''

''திடீர்னு என் முன்னால ஒரு சிங்கம் நின்னு பயங்கரமா உறுமிச்சு... சீக்கிரமா ஏதாவது செஞ்சாக வேண்டிய நிலைமை...''

''அய்யய்யோ அப்புறம்?''

''அப்புறமென்ன? அடுத்த கூண்டுல என்னன்னு பார்க்கப் போயிட்டேன்.''





''இந்த வழியாக போகலாமா சார்?''

''ஏன் கேக்கற?''

''வாகனங்கள் போகக் கூடாதுன்னு போர்டு போட்டிருக்கு. என் பேரு மயில்வாகனம். அதான் கேட்டேன்!''

சூரியன் பூமியை விட **ஒரு மில்லியன்** மடங்கு பெரியது.





''எங்க தாத்தாவை மாதிரியே பாடுறீங்களே!''

''உங்க தாத்தா பெரிய பாடகரா?''

''ம்ஹூம்! அவருக்கும் பாடத் தெரியாது.''



''சூரியன் மறைகிறது - இது என்ன காலம்?''

''சாயங்காலம்.''




''அமெரிக்கா குண்டு போட்டால் எப்படி வெடிக்கும்?''

'' 'புஷ்'னு.''

நல்லா பாடுவாரா?

அ. பேச்சியப்பன் - இராஜபாளையம்

'உயிர்களும், உயிர்களுக்குத் தேவையான பொருட்களும் மிக மிக அதிக அளவில் பெருகிக் கொண்டு வருகின்றன, என்று உயிரியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். உயிர் தோன்றுவதற்குத் தேவையான ஆக்ஸிஜன், கார்பன், நைட்ரஜன், ஹைட்ரஜன் மற்றும் பல்வேறு தனிமங்கள் மிக அதிக அளவில் தற்பொழுது பெருகி வருகின்றன. இந்த வாயுக்கள் உலகம் தோன்றியபொழுது சிறிதளவே இருந்ததாக



மனிதர்களும்

வும், ஆனால் தற்பொழுது இவை பெருமளவில் பெருகி மனித உயிர் நல்வாழ்க்கைக்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவதாகவும் அறியப்படுகிறது.

காற்றில் நைட்ரஜன் எழுபது சதவிகிதமும், நீரில் ஹைட்ரஜன் ஐம்பது சதவிகிதமும், ஆக்ஸிஜன் காற்றில் இருபத்தெட்டு சதவிகிதமும் நீரில் நாற்பது சதவிகிதமும் இருக்கின்றது. இவற்றின் ஒன்றுக்கொன்று இணைந்த தன்மையாலும், சுழற்சியாலும் உயிர்கள் பல்கிப் பெருகுகின்றன.

பூமியில் இரும்பும் அதற்கும் மேலாக அலுமினியமும் மிக அதிக அளவில் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு கருங்கல்லில் கூட இரும்பு இருக்கின்றது. ஒரு காய்கறியில் கூட இரும்பு இருக்கின்றது. ஆனால் நாணயங்கள், கம்பிகள் போன்றவற்றை தயாரிப்பதற்கான இரும்பு, இரும்புத் தாதுவிலிருந்து கிடைக்கிறது. உபயோகப்படுத்தக் கூடிய நிலையில் இருக்கின்ற இரும்பின் அளவு, அதாவது, இரும்புத்தாது, குறைந்த அளவே இருக்கிறது.

இந்த இரும்புத் தாதுக்களும் மற்ற

பூமி, மணிக்கு **1000 மைல்கள்** வேகத்தில் சுற்றுகிறது.



கனிமங்களின் தாதுக்களும் உருவாவதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆயிற்று! பூமி தோன்றி பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே உலகில் மனிதன் தோன்றினான். மனிதனுடைய நல்ல, சிறப்பான வாழ்க்கைக்கு இந்த இயற்கை வளங்களைத் தகுந்த தொழில்நுட்பத்தோடு நீண்ட காலம் பயன்படுமாறு செய்ய வேண்டும்.

எண்ணெயின் மொத்த இருப்பில் மூன்றில் இரண்டு பங்கை, கடந்த இருநூறு ஆண்டுகளில் செலவழித்துவிட்டோம். மீதமுள்ள ஒரு பங்கு கரிம எண்ணெயை நாம் சிக்கனமாக உபயோகித்தால்தான் சில மருந்துகள் செய்வதற்கும், பயணம் செய்வதற்கும் வருங்காலத்துக்குப் பயன்படும். அரிய பொருட்களைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

அண்டத்தில் பல கோடிக்கணக்கான கேலக்ஸிகளும், பல கோடிக்கணக்கான கேலக்ஸிகளில் உள்ள பல சூரிய, நட்சத்திர மண்டலங்களில் பல பூமிகளும் இருக்கின்றன. இவற்றில் உயிர்கள் வாழ்வதைக் கண்டுபிடிக்க, முப்பது வருடங்களுக்கு முன்னால் அமெரிக்காவால் அனுப்பப்பட்ட பயனியர் ராக்கெட், நமது சூரிய மண்டலத்தைக்


பூமியும்!



கடந்து அடுத்த சூரிய மண்டலத்துக்குச் சென்று, உயிர்கள் வாழ்வதற்கு ஆராய்ச்சி மேற் கொண்டுள்ளது. அறிவியலில் வேகமாக முன்னேறினால் மட்டும் போதாது. நாளை, நமது அடுத்த தலைமுறைகளும் நல்வாழ்வு வாழும் வகையில் நமது செயல்பாடு இருக்க வேண்டும். அதுதான் உண்மையான அறிவியல் முன்னேற்றம். சிந்தித்துச் செயல்படுவோம்; உலகைக் காப்போம்!

தேன்மொழி-கனிமொழி

கருத்து, படம் : பிள்ளை



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 · Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 · Registered as a Newspaper in Srilanka